பதினேழாம் ஆண்டுமலர்.

*Registered at the G. P. O. as a Newspaper*
**Bilingual Monthly**

# சிவதொண்டன்

(செந்தமிழ் — ஆங்கிலத் திங்கள் வெளியீடு)

—"என்னுடைய நெஞ்சில் நன்னுடைய ஈசன்"—

| | | |
|---|---|---|
| மலர் 17 | நந்தனஹு மார்–தை–மாசி—(டிசம்பர். 1952—ஜன—பெப். 1953) | இதழ் 1 & 2 |

## கற்றிலலதென் கண்துயில் கொள்ளுமே!

உற்ற வர்தம் உறுநோய் களைபவர்
பெற்றம் ஏறும் பிறங்கு சடையினர்
சுற்றும் பாய்புனல் சூழ்திரு வீரட்டம்
கற்றி லலதென் கண்துயில் கொள்ளுமே

உலந்தார் வெண்தலை உண்கல னாகவே
வலந்தான் மிக்கவன் வாளரக் கன்றனைச்
சிலம்பார் சேவடி யூன்றினன் வீரட்டம்
புலம்பே னாகிலென் கண்துயில் கொள்ளுமே

அப்பர்சுவாமிகள்




கல்லாலின் நீழல்தனில் ஒருநால் வர்க்குங்
கடவுள்நீ உணர்த்துவதுங் கைக்காட் டென்றால்
சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்புபற்றிக் கடற்கடக்குந் துணிபே யன்றோ

—தாயுமானவர்.

# சிவதொண்டன்

(செந்தமிழ் — ஆங்கிலத் திங்கள் வெளியீடு)

— "என்னுள்ளார் நெஞ்சில் நண்ணுவா னீசன்" —

மலர் 17 | நந்தன ஞு மார் — தை —(டிசம்பர். 1952—ஜன—பெப். 1953) | இதழ் 1 & 2

ஓம் !

## சிவதொண்டற்குத் தைப்பொங்கல் வாழ்த்து

### ஆசிரிய விருத்தம்

பொறுமையெனு மடுப்பின்மேல் வாய்மையுள மெனும்பெரிய
புதுமட் பானை
மறுவறுமன் பெனுமான்பா லுலையேற்றி மெய்யுணர்வு
வளர்தீ மூட்டிச்
செறுவினைப்பச் சரிசியட்டி யருட்கட்டி விராயமைதிச்
சேதா நெய்வார்த்
துறுமின்பம் பொங்கத்தைப் பொங்கல்விழாச் சிவதொண்ட
னுளுற்றல் செய்தான். (1)

அருள்புணருஞ் சிவயோக ரகம்பிறந்த பசுங்குழவி
யன்பு சால
மருள்கழியப் பதிப்புறுதொட் டிற்கிடந்து புலவாணர்
மலர்க்கை யேந்தப்
பொருளின்மடி மிசைத்தவழ்ந்த சிவதொண்டன் வாயிதழ்நீர்
போத நின்று
தெருள்வெளியி னடைபயின்று மழலைமொழி செவிமடுப்பச்
சிறத்தல் வாழி. (2)

பதிப்பு
வாயிதழ் நீர்போத நின்று } இரட்டுறமொழிதலணி

சிவதொண்டனுகிய வாய்மைப் பத்திரிகை இனிமை நிரம்ப நின்றென்க.

# நாம் யார்?

அல்லும் பகலும் லௌகிக விடயங்களிலேயே மனதைச் செலுத்தி உண்மைக்குச் சேய்மையில்நிற்கும் நம்மனோரிற் பெரும்பாலோர்க்கு "நாம் யார்" என்னும் இக்கேள்வி சிறிது சிந்தித்தற்கிடந் தருகின்றது.

சிலர் "இதுவென்ன பழங்கதையாயிற்றே. தத்தம் மதம் நிறுத்தப்புகும் சமயநூல்வல்லார் யாவரும் இதைப்பற்றித்தானே பேசியிருக்கின்றார்கள்" என்று கருதக்கூடும். "நாம் யார்" என்னவே சிலர் "நாம் மக்கள்" என்றும், நகைச்சுவை ததும்பப் பதில்கூறி அமைதல் கூடும்.

ஆனால், இன்றோ மற்றென்றோ ஒவ்வொருவரும் இக்கேள்வியைத் தம்முள்ளே வினவவும், அதுபற்றி ஆராயவும், ஆராய்ந்து அநுபவவாயிலாக அறியவும் வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஏனெனில், வீடுபேற்றிற்கு இன்றியமையாத சாதனம் அதுவேயாம். "தன்னையறிந்தாற் தலைவனை அறியலாம்" என்பது பெரியோர் வாக்குமாதலின்.

## உடலா?

நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பூதங்களாலாய இவ்வுடல்தானே நாமென்னின், நாம் உறக்கத்திலிருக்குங்கால் அறிவு நிகழக் காண்கின்றோமில்லை. மேலும் உடல் பிரேதமாய்க் கிடக்கும்போது உடலுக்கென ஓர் அறிவு நிகழக் காண்கின்றோமில்லை. ஆகவே உடம்பு அறியமாட்டாதென்பது பிரத்தியக்ஷம். ஆனால் நாம் அறியுந்தன்மையுள்ளோம். அறியுந் தன்மையுள்ள நாம் உடலாதல் ஒருபோதும் சாலாது. எனவே, நாம் உடலின் வேறான ஒரு விழுப்பொருள் என்பது வெள்ளிடைமலையாம்.

## ஐம்பொறிகளா?

இனி, உடலிலுள்ள மெய், வாய், கண், மூக்குச், செவிகளாகிய ஐம்பொறிகளையும் அடிப்படையாகக்கொண்டு எழும் ஐம்புலன்கள் தாம் நாமோவெனின், அவை தாமும் உறக்கத்தின்கண் விடயங்களை அறியமாட்டாவாகின்றன. நாம் உறங்குங்கால், அவை ஒடுங்கி நிற்கின்றன. ஆனால், நாம் விழித்திருக்குங்கால், அவை ஒவ்வொரு பொறியாக விடயத்தை அறிகின்றனவென்றாலோவெனின், அற்றன்று; என்னை? அவை ஒன்றையொன்று அறியமாட்டா. நா ருசியை அறியுமேயன்றி இன்னிசைக் கீதத்தை அறியமாட்டாது. அவ்வாறே, நறுமணத்தை மூக்கே முகருமன்றிக் கண் அதனை அறியாது. ஆகவே, மெய், வாய், கண், மூக்குச், செவியாதியவற்றைக் கொண்டு விடயங்களை அறியும் நாம் இவற்றினும் வேறுவோம் என்பதும் வெளிப்படை.

## பிராணவாயுவா?

இவ்வைம் பொறிகளையும் கொண்டு விடயங்களை அறியக்கூடியது பிராணவாயுவாகலின், நாம் பிராண வாயுவோவெனின், அதுவுமன்று. என்னை, உடம்பு உறங்குமிடத்துப் பிராணவாயு இயங்கினும் விடயங்களை அறிய முடியாததாதலினென்க. ஆகவே, பிராண வாயுவை அடக்கியும் விட்டும் நிற்கும் யாம் அதனினும் வேறுவோம் என்பது தேற்றம்.

## அந்தக்கரணங்களா?

பின், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களே நாமாவோமா என்று ஆராய்ந்து பார்க்குமிடத்து, நாம் அவையுமன்று என்று தெரியக்கூடியதாக இருக்கின்றது. ஏனெனில், அவையும் ஒன்றையொன்று அறியமாட்டா. தவிர அவற்றுள் ஒன்று அறிவதை மற்றொன்று அறிதலின்றி வெவ்வேறு தொழில்களைப் பொருத்தா நிற்கும். ஆனால், நாமோ அந்தக்கரணங்கள் நான்கினையும் அறிந்து, அவற்றை விடயங்களிற் செல்லவிடாது தடுத்தும், வேண்டுழி விடயங்களிற் செலுத்தியும் அவற்றின் வேறாக நின்று "யான்" "எனது" என்று கூறும் நிலையில் நிற்கக் காண்கிறோம்.

## பஞ்சகோசங்களல்ல.

இவ்வாறே ஆனந்தமயகோசம் விஞ்ஞானமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், அன்னமயகோசம் என்னும் ஐந்து கோசங்களும் நாமல்லவென்று காண்கின்றோம்.

## சித்தாகிய ஆன்மா.

ஆகவே, இவற்றினின்றும் வேறாய், இவற்றோடுடனுறைந்து இவற்றைக் கொண்டு விடயங்களை அறியும் நாம் சித்துப்பொருளாவோம். சித்துப் பொருளெனினும் அறிவுமயமான பொருளெனினும் அமையும். இப்பொருளை உயிர் என்றும், பசுவென்றும், ஆன்மாவென்

# எண்ணெழுத்திகழேல்

ஔவைப்பிராட்டியார், தன் பின்னையோரின் நல்லாக்கத்திற்காய் ஈட்டிவைத்த, அழியா நிதிக்குவையின் பேரொளியா யமைந்தது, இம்மணிவாக்கு. பல நூற்றாண்டுகட்கு முன் நம்மைவிட்டு மறைந்த, அம் மூதாட்டியாரின் முதிய, தாய்வடிவத்தினை, இன்றும் எம்மகக்கண்முன் தெளிவுறக் காட்டிநிற்பது, அவரது புனித உள்ளத்தில் உதயமாகிச் சுடர் பரப்பிய மெய்யறிவின் சோதியே. அப்பேரொளியின் பிரகாசத்தில், மனித சமூகம், மெய்யறிவின் வளர்ச்சிபெறத் தவிக்கும் அவரது தாயுள்ளத்தின் துடிப்பை, நாம் அன்றும் இன்றும் என்றும் காணலாம். உயிர்நல வளர்ச்சியே, அவரது அடங்கா ஆவலாய் நிறைந்திருப்பதை, அவரது மலர்வாய்ப் பிறந்த வாசகமனைத்தும் ஒலிபரப்பியுள்ளன. அவ் ஒலிப்பின் ஓசையை நாம் அமைந்து கேட்போமாயின், நம்பின்னையோர், எண்ணெழுத்திகழ்ந்து, கலைக்கண்ணிழந்து, குருட்டறிவினராய் இருட்சியிற் கடுமாறலாகாதென இரக்கும், அவரது இதயபிரார்த்தனை நம் செவிகளில் எதிரொலிக்கும்.

மனித அறிவின் பண்பட்ட செம்மை வாழ்விற்கு இன்றியமையாத—அத்தியாவசியமான உண்மைப் பொருள்களைச் சேமித்து வைத்துச் சென்ற, பற்பல அருட்பெரியார்களுள், நம் பிராட்டியாரும் ஒருவரே. இவர் தாம் தொகுத்துத் திரட்டிய, அரும்பொருளனைத்தையும், அழியாது பாதுகாக்கும் கருவூலங்களாக, அகரம் முதல் னகர ஈறாக உள்ள தமிழ் எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இவ்வியத்தக்க நுண்ணறிவு, நம்மன்னையார் ஒருவர்க்கே தனிப்பெருஞ் சிறப்புரிமையாயது. 'எ' என்னும் ஒரு - சிறு - எழுத்தில், இவ்வுலகின்—உயிர்வாழ்வின் நிலைபேற்றிற்கே ஆதாரமான—அத்தியாவசியமான— அடிப்படையான பேருண்மையை அடக்கியுள்ள இவரது கலைஅறிவு, ஆழமும் நிறைவுமுடைத்தாய் அற்புத சக்திவாய்ந்தது.

மனிதப் பண்பும், தெய்வத் தூய்மையும், ஐயாண்டதனில் மையேடு கைப்பிடிக்கும், பச்சிளம் பருவம் முதல், குழந்தையுளத்தொடு பின்னிப்பிணைந்து, ஒன்றியுருப்பட வளர்க்கும் இவர், ஒவ்வோர் தமிழெழுத்தும் ஒவ்வோர் உண்மையை, மழலை உளங்களில் வேர்விழ்த்துமாறு, சுருங்கிய, இலகுவான சொல்லமைப்பால் நிலைநாட்டினர். பெரும்பொருள் விளக்கும் இவரது சுருங்கிய சொல்லாட்சி, கலைப்பெருந் தேரினைத் தாங்கி நிறுத்தும், சிறு அச்சாணி போன்றது.

ஔவையாரது "எண்ணெழுத்திகழேல், எனும் சொற்சுருக்கத்தினை, விளங்கவைப்பார் போல, "எண்ணென்ப ஏனை எழுத்தென்ற இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு" எனத் தெளியவைத்தனர் வள்ளுவப் பெரியார். எண்ணும் எழுத்துமாகிய இரண்டும், அறிவுருபனாகிய உயிரினது இருகண்களாகும். இக்கண்களின் ஒளியினாலேயே, அதன் வாழ்வு நிலைபெறுகின்றது. அவ்வொளி குன்றாது சிரத்தையோடு பாதுகாத்தல்வேண்டும். அதனை அலட்சியம் செய்யின், உண்மை நோக்கிழந்து இருட்சியிற் கடுமாறிப் படுகுழியில் வீழ்ந்து இடருற நேரும் என்பது இதன் விளக்கமாகும். தன் கூற்றிற்குக் காரணமாகப், பிராட்டியாரும், "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என அது இகழப்படாது போற்றப்பட வேண்டும் அவசியத்தை உணர்த்தியுள்ளார். எண்ணும் எழுத்தும் கண்ணாக அமையவே, அதன் பண்பும் பயனும் இன்றியமையாமையும் அதிற் றாமே அடங்கியுள்ளன. உயிர் வாழ்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்கவும்)

---

றும், வழங்குவோர் ஆன்றோர். நாம் எல்லோரும் ஆன்மாக்கள். ஒரோவழி அன்னமய கோசம் முதலியவற்றையும் ஆன்மாவென அழைப்பதுமுண்டு. அது எதுபோலுமெனின், ஒளிகாலும் விளக்கிருந்த தகழியையும் விளக்கு என்றாற்போலென்க. இதுபற்றியே தாயுமான சுவாமிகளும்,

"ஐந்து புலனைம்பூதங் கரணமாதி,
அடுத்த குண மத்தனையும் அல்லை அல்லை
இந்த வுடலறி வறியாமையு நீயல்லை
யாதொன்று பற்றினதன் இயல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீ"

என்று அருளிப் போந்தார்.

# சிவனடியைச் சிந்தை செய்வோமே

சிவனடியைச் சிந்தை செய்வோமே. சீராகச் சிறப்பாக நாமெல்லோரும் வாழ்வோமே. நல்லாக வாழவேண்டுமென்று எல்லாருந்தான் விரும்புகிறார்கள். விரும்புவது மாத்திரமல்ல, தங்களாற் கூடிய அளவுக்கும், தங்களறிவுக்கெட்டிய அளவுக்கும், அதற்கு வேண்டிய பிரயத்தனங்களையுஞ் செய்துகொண்டுதானிருக்கிறார்கள். ஆனால், எல்லாருடைய வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகச் சிலர்மட்டுமே பூரண சிறப்புடையதான வாழ்க்கையை நடாத்த முடிகிறதென நினைக்க வேண்டியதாயிருக்கின்றது.

இப்படியாக வாழ்வும் தாழ்வும் கலந்திருப்பதற்கு நியாயம் உலகம் பலவிதம் என்றும், இயற்கையிலேயே உலக விவகாரங்கள் அப்படியே யுள்ளனவென்றும், அதை ஈசுர சங்கற்பமாக ஏற்றுக்கொள்ளுதல்தான் முறையென்றும் விஞ்ஞானிகள் கூறுவதை நாம் வாசித்துமிருக்கிறோம். கேட்டுமிருக்கிறோம். ஆனால், சமயக் கொள்கைகளிற் பற்றும் விசுவாசமும் வைத்திருப்போர் இப்பிறவியில் நாம் அனுபவிப்பவையெல்லாம் முற்பிறவிகளில் நாம் செய்த கர்மத்தின் பலன் எனப் பொதுவாக நம்புகிறார்கள். இப்படியாக முன் வினையின் பயனாக நாம் இப்பிறவியில் அனுபவிக்கும் வினையைப் பிராரத்தம் அல்லது ஊழ் என அழைப்பார்கள். இதைத்தான் உலகத்தவர் பொதுவாக விதியென்றும் விலக்கமுடியாததென்றுங் கூறுவார்கள்.

ஆனால், இப்பிறவியில் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களெல்லாவற்றுக்கும் பிராரத்தம் மட்டுமே காரணம் என்று சொல்லவும் முடியாது. ஏனெனில் இப்பிறவியில் நாம் செய்யுங் கர்மத்துக்கும், பெரும்பாலும், உடனுக்குடனே தானும் பலன் சித்திப்பதாயிருப்பதால் பிராரத்தம் மாத்திரம் நம்முடைய இன்ப துன்பங்களுக்குக் காரணம் எனும் நியாயம் ஒத்துவராது. நமது முயற்சியாற் புரியும் புதுக்

(தொடர்ச்சி 8 பக்கம் பார்க்கவும்)

---

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

விற்குப், புறக்கண்கள்போன்ற முக்கியத்துவம் உடையது, எண் எழுத்தாகிய அகக் கண்கள் ஆதலினவற்றை, எவரும் எக்காலத்தும், அலட்சியம் செய்யாது, பாதுகாத்தல்வேண்டுமென்பதை வற்புறுத்துவது இக்கூற்று.

நூறு நூறாயிரம் வடிவினதாய், விரிந்து பரந்த, கலை உலகின், விசுவரூபம், எண்ணும் எழுத்துமாகிய இருகண்களின் ஒன்றியகட்புலனுக்கே, காட்சிப் புலனாவதன்றி மற்றெதனாலும் அறியப்படாதது. எண்ணும் எழுத்துமாகிய இரண்டின் ஒன்றிப்பினாலேயே, கலை உலகம் உருவாகின்றது. எண் கணித்தலறிவையும், எழுத்துவிடய அறிவையும் அடக்கியுள்ளன. அளவை விடயமாகிய இரண்டின் ஆட்சியினாலேயே உயிர்வாழ்வு நிலைபெறுகின்றது.

உலகில் உருவாகும் கலை, தொழில், பொருள்களத்தனையும், காலம், இடம் கோள்களனைத்தும், அளவையின் நியதியினால், வரையறுக்கப் படுவதே. நம் அறிவு நினைவு செயல் அனைத்தையும் வரையறுக்கும் இவ் அளவையின் நியதி, கூடினும் குறையினும் கேடு தரும். நுட்பம் வாய்க்கததாதலின், நாம் கையாளும் ஒவ்வோர் செயலும் பொருளும், ஒவ்வோர் கணமும் கணிப்பினுக்குட்பட்டே நிலைக்கின்றன. நம் வாழ்க்கையில், எத்தனை எவ்வளவு எனும் கணிப்பு, எழும்பாத செயல் எதுவுமே இல்லை. அதனை, இத்தனை இவ்வளவு என வரையறுக்கும் தொகுதியே எண்ணாகும். ஓவியம், சிற்பம், விஞ்ஞானம், பௌதிகம், சங்கீதம், சோதிடம், வைத்தியம், முதலாய கலைகளும், அவ்வக் கலையறிவினால் நடைபெறும் தொழில்களும், இவ் எண்ணுடன் ஒன்றி விரவியே நடைபெறுகின்றன. இவ் அறிவிற் போதிய விளக்கம் பெறாது, நாம் எத்தொழிலையும் கையாள இயலாது, அட்டிற்றொழில் முதல் அவனி ஆளுந்தொழில் ஈறாக, வியாபித்து வரையறுக்கும், கணித அறிவு, உயிர் வாழ்வின் முக்கிய அம்சமாகும். இதன் முக்கியத்தை உணர்த்தவே, எண்ணை முன்வைத்துக் கூறினார்போலும், பிராட்டியாரும் புலவரும்.

உயிருணர்விற்கு மூலாதாரமானதும், கலை உலகின் பிறப்பிடமாவதுமாய, ஒலியின் வரி வடிவே எழுத்தாகும். பிரிந்து தோன்றாது,

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

# சிவதொண்டன் வாழ்த்து

—ooo—

**1**

விண்ணின் முளைக்கு மிளம்பரிதி வெட்குந்
தோற்றக் கவசமுடீஇ
வேதம் நான்கு மிதுகாலும் வேண்டி
யழுதுங் காணாத
உண்மைப் பொருளாங் குடிலைதனை யுச்சித்
திலக மெனச்சூடி
ஒன்றும் மூல நிலத்தினிலே யொடுங்கி
யுயிர்த்தே யதோமுகமாய்
மண்டிக் கிடக்குங் குண்டலினி வாதக்
கனலா லேயெழுப்பி
மதியி னமுதக் கடல்மாந்தி மலருந்
தந்தை வாய்மலரும்
பண்ணிற் சிறந்த திந்நூலையாம் பணிகள்
பூட்டி ஞாலமிசை
பதினே ழாட்டைக் குமரனெனும் பண்பி
னீடுஞ் சிவதொண்ட!

**2**

கோளி னிலைதான் றிரியவரிற் கோளி
னிலையும் மாறாகிக்
கோடை நீடி மக்களுயிர் கூம்பிச்
சாம்பிக் குன்றாதே
[illegible]னின் சிறப்பை முதற்கூறி மழையாஞ்
சாவா மருந்தளித்து
வாழும் முறையும் விளைமாண்பும் வல்லான்
வகுத்த பெருவாழ்வும்
ஆனே றுயர்த்த சிவபெருமா னறிவார்க்
கோதுஞ் சோதிடமு
மவரே வந்திங் காளாகி அடிபட்
டொளித்த சிவகதையும்
தேனா ரமுதத் தீந்தமிழிற் செவிக்கேற்ப
விருந்தா யெமக்களித்த
செல்வா வாழி! சிவதொண்டச் சிறுவா
வாழி வாழியவே!!

**3**

மடலார் பெண்ணைப் பூம்பாளை மடக்கித்
தட்ட வடிதேறல்
மாந்தி யறிவு வெளிப்போந்து மாக்கள்
வால்சேர் நரராகித்
தடியா லடித்துமுயிர் கொள்ளுந் தங்கள்
குடும்பச் சார்பிழந்தும்
தலையால் நடக்கும் பழிக்கஞ்சித் தமிழன்
தகைமைதனை நாட்டப்
படியி லறிவுச்சுடர் கொளுவிப் பாவச்
செயலை யொழிமினெனப்
பலகா லோதும் அறமொழியும் பல்வே
றறிவுக் கட்டுரையுங்
கடியார் மதுரைத் தமிழ்ச்சங்கக் கடவுட்
புலவன் கவிநலமுங்
காட்டுங் கண்ணே! சிவதொண்டக் கடவுள்
மதலாய் நீவாழி!!

**4**

செய்ய மேனி செம்பாகம் கறுக்க
வந்த சிவனாரின்
தெய்வக் கூத்தி னுருக்காட்டிச் சிறந்த
சமயப்பொருள் காட்டி
வையந் தானும் சிறியேங்கள் வாழ்க்கை
தானும் வாழ்நாளும்
வளத்தாற் பெருகிச் சீரோங்க வற்றாக்
கருணை பொழிமுகிலே!
கையாங் கமல முகைநெகிழக் கருத்தாம்
முளரிமணம் விரியக்
காலந்தோறும் வெளித்தோன்றிக் காலும்
பரிதி யிளஞ்சுடரே!
உய்யும் நெறிகள் பலகூறு முயிருக்
குயிரா மருட்டாதை
ஊட்டி வளர்க்குங் குமரா நீ யூழி
யூழி வாழியவே!

# சரீரலக்ஷணம் சாங்கிய விசாரணை

சரீரலக்ஷணம் இப்பேர்ப்பட்டதென்று விசாரித்துத் தெரிந்துகொள்ளாவிடில் ஆத்மா இப்பேர்ப்பட்டதென ஆத்மஞானம் உண்டாகமாட்டாது. ஆதலால், சரீர லக்ஷணம் இப்பேர்ப்பட்டதென்பதை சிரத்தையுடன் விசாரிப்பதே மிகவும் முக்கியமானது.

தேகம் இப்படிப்பட்டதென்றும், தேகி இப்படிப்பட்டவனென்றும் தெரிந்துகொள்வது, சாங்க்கிய விசாரணை என்று சொல்லப்படும். ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, தந்மாத்திரைகள் ஐந்து, பிராணன்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு, இந்த 24 தத்துவங்கள் கூடினவையே சரீரம் இச்சரீரத்தில் வசிக்கும் ஆத்மாவே 25-வது தத்துவமாம். 26-வது தத்துவமே பரப்பிரம்மம். இந்தப் பரப்பிரம்மத்தில் 25-வது தத்துவமாகிய ஜீவாத்மாவைச் சேர்ப்பிக்கவேண்டும். இவ்வாறு சேர்ப்பிப்பதே மோக்ஷம் என்று சொல்லப்படும்.

### ஞானேந்திரியங்கள் — 5

பூதாதி யெனும் பெயரஞ்சுண்டே தென்னில்
  பிரிதி வப்புவுடன் றேயு வாயு வாகாயம்
ஆதாரமான மண்ணீர் நெருப்போ
  டசைவான வாயு வெளியதன் பேரைந்தாம்
சூதான ஞான விந்திரிய மைந்து
  துய்ய தோக்கு சட்சு சிகுவை யாக்கிராணஞ்
தீதான சோத்ர மிதன் விரிவு கேளாய்
  சிறந்த செவியுடம்பு வாய் கண் மூக்காமே.

1. சுரோத்திரம் :— செவி, இது, ஆகாசத்தின் அம்சமானபடியால், அதன் குணமாகிய நாநாவித சப்தங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும்.

2. தோக்கு :— தோல், இது வாயுவின் அம்சமானபடியால், அதன் குணங்களாகிய சீதம் உஷ்ணம் மிருது கடினம் என்னும் நான்குவித ஸ்பரிசங்களை உணரும்.

3. சட்சு :— கண்கள், இது அக்கினியின் அம்சமானபடியால், அதன் குணங்களாகிய வெண்மை, கருமை, சிவப்பு, பச்சை, நீலம் மிசிரவர்ணம். நீளம் குட்டை தூலம் ஸன்னம் என்னும் பத்துவித ரூபங்களைப் பார்க்கும்.

4. சிங்குவை :— நா. இது அப்புவின் அம்சமானபடியால், அதன் குணங்களாகிய உப்பு, புளிப்பு, இனிப்பு, கசப்பு, கார்ப்பு, துவர்ப்பு என்னும் அறுசுவைகளின் ரசத்தை அறியும்.

5. கிராணம் :— நாசி (மூக்கு) இது, பிருதிவியின் அம்சமானபடியால் அதன் குணமாகிய சுகந்த துர்க்கந்தங்களை மாத்திரம் பகுத்து அறியும். இவ்வைந்து இந்திரியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தை அறிவதனல் இவைகள் ஞானேந்திரியங்கள் எனப்படும்.

### கன்மேந்திரியங்கள் — 5

உண்டு விரித்திடும் வாக்குப் பாதம் பாணி
  யோப்பரிய பாயுருவோடு பத்தமைஞ்சாம்
கண்டு கொள்ளும் வாக்கு வாய் திறத்தல் பாதங்
  காணுமிரு கால் பாணி கையதாகும்
விண்டு முறை பாயுருக் கண்ணியாகும்
  விரித்தபடியுபத்த மேன்பதுவே லிங்கம்
என்று மறிகரண மினி நான்குகளோ
  யியம்பு மனம் புத்தியாங்காரஞ் சித்தம்.

1. வாக்கு :— வாய். இது ஆகாயத்தின் அம்சமாயிருப்பதனல் ஆகாசத்தின் குணங் கொண்டு வசனிக்கும்.

2. பாணி :— கைகள். இவை வாயுவின் அம்சமாயிருப்பதனல் கொடுத்தல், வாங்கல், பிடித்தல், விடுதல் முதலாகிய காரியங்களைச் செய்யும்.

3. பாதம் :— கால்கள். இவை அக்கினியின் அம்சமாயிருப்பதனல் நடப்பது, உட்காருவது, நிற்பது, எழுந்திருப்பது முதலான காரியங்களைத் தாங்கி நடக்கும்.

4. பாயுரு :— குதம். இது பிருதிவியின் அம்சமாயிருப்பதனல், மலஜலாதிகளை வெளியில் தள்ளச் செய்யும்.

5. உபஸ்தம் :— மருமஸ்தானம். இது அப்புவின் அம்சமாயிருப்பதனல், மூத்திரம் சுக்கிலம் சுரோணிதம் விடுவித்து போகானந்தம் அடைவிக்கும். இந்த ஐந்தும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரியத்தைச் செய்துகொண்டிருப்பதனல் இதற்குக் கர்மேந்திரியங்கள் என்று சொல்லப்படும்.

### அந்தக்கரணங்கள் — 4

"மநோபுத்தி ரஹங்கார சித்த மித்யந்த: கரண சதுஷ்டயம், தேஷாம் க்ரமேண ஸங்

(தொடர்ச்சி 9 பக்கம் பார்க்கவும்)

# உலகம் உயர்தரப்பள்ளி

விசித்திரத் தோற்றமாகக் காட்சியளிக்கும் இவ்வுலகம் ஆன்மகோடிகள் வாழ்வதற்கு நிலைக்களனாகமட்டும் அமையவில்லை. அவை உயர்தரக் கல்வி கற்பதற்கு வாய்ப்பான அதிசய கலாசாலையாகவுமுள்ளது. உயிர்த்தொகுதிகள் பலவகை அப்பியாசங்களைப் பயின்று தேர்ச்சிபெறும் அப்பியாச நிலையமாகவும் காணப்படுகின்றது.

பொருட்பரப்பின் எம்மருங்கினையும் தவறவிடாது கற்பிப்பதற்கு வாய்ப்பான உபகரணங்களையும் இயற்கையென்னும் அற்புதப் பேராசிரியரையும் தன்னகத்தடக்கிக்கொண்டு அகண்டிதமாய் விரிந்து கிடக்கும் உலகம் நமக்கு வரப்பிரசாதமாகக் கிடைத்த இலவசப் பாடசாலையாம். கல்விப் பரப்பு முழுவதையும் நாம் நான்முகமாக உயர்தரக் கலாசாலைகளிற் கற்றுத் தேறினும் இயற்கை ஆசிரியன் தன் மௌனவாக்கால் நமக்கறிவுறுத்தும் இரகசிய உண்மையின் பொருட் பொலிவை நாம் வேறெங்கேனும் கற்க முடியாது. அத்தகைய ஒரு பேராசிரியன் நமக்குச் சொந்தமாக இருக்கவும், நாம் அக் குருமணியைச் சாதாரண பேர்வழி எனக் கருதிவிடுகின்றோம். இக் குருமணியின் மாயவித்தைகளை ஊடுருவி நோக்கி உள்ளமைதி கொண்டவர்களே, முடியாவின்பம் பெற்றனர். பிறவிப் பெருங் கடல் தாண்டினர். பூரணத்துவம் பெற்றனர்.

நாமும் அவ்வாறு பூரணத்துவ மடையுமட்டும் இயற்கை நமக்கு வேண்டிய சேவையைச் செய்தே தீரும். நம் கைம்மாறை எதிர்நோக்கி இயற்கை சேவைபுரியவில்லை. உயிரினங்களின் ஆக்கம் குறித்தே இயற்கை தன்னைப் புலப்படுத்திக் கொள்ளாமல் ஆரவாரமின்றி அமைதியாய்ச் சேவை புரிகின்றது. அதற்கு ஓய்வில்லை; ஒழிவில்லை; இரவு பகலென்றில்லை. கணப்பொழுதேனும் அயர்வதில்லை. உயிர்க் குலங்களின் தேவை கட்காகத் தன்னை அர்ப்பணம் செய்துகொண்டு தொண்டாற்றும் கடமையொன்றினையே அது அறியும். இவ்வுலகம் நமக்குக் கற்பிக்கும் பாடங்கள் எல்லாவற்றுள்ளும் இயற்கையாகிய இச்சீரிய தொண்டனின் பொதுநலப் பணிச்சிறப்பை முதற் பாடமாகக் கற்கக் கடமைப் பட்டுள்ளோம். மனிதன் ஒரு சிறு பணியைச் செய்தாலும் தன் செய்கை நலனைப் பாராட்டி அகங்காரங் கொண்டு இறுமாக்கின்றான். இயற்கை இத்துணைப் பெருஞ் சேவையை உயிரினங்கட்காக அயராதாற்றியும், தன்னைப் புலப்படுத்திக் கொள்வதும் கிடையாது. அதனோடு இயற்கை அணுப்பிசகாமல் தன் தொழிலை நடாத்திக் கொண்டிருக்கும் சிறப்பும் உற்று நோக்கற்பாலது. காலை மாலை இரவு நண்பகல் மாரி கோடை ஆகிய காலங்களும் பிறப்பு இறப்பு இளமை மூப்புப் பசி பிணி ஆகிய நிகழ்ச்சிகளும் இயற்கையின் சட்டப்படி இயல்பாக நடந்துகொண்டிருக்கும் விந்தையை உற்று நோக்கினால் இயற்கையின் ஆற்றலும் வலிமையும் புலனாகும்.

நாம் இவ்வுலகில் பிறக்க வேண்டியதே தாமதம். பிறந்த அந்தநேரம் முதல் இறக்கும் வரை எவ்வாறாயினும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கவே இயற்கை பணிக்கின்றது. அவ்வாறே அமைகின்றோம். யாதுமறியாக்குழவிப் பருவத்துங்கூட நம்மை கால்களை இயற்கையின் சட்டப்படி அடித்து நம் சிற்றுடம்பின் நலத்துக்கு வேண்டிய அப்பியாசத் தேவையை நிரப்பியே தீருகின்றோம். நம்பசியை யுணர்ந்து பால் அருந்தும்படி அழுது அன்னைக்குணர்த்தி விடுகிறோம். ஆனால், நமக்குப் பாலருத்தி நம்மைப் பாராட்டிச் சீராட்டி அன்பொடு பாதுகாக்கும் அவ்வன்னை நாம் தேடி வைத்த முதல் அன்று. பிறந்தவுடன் நன்கொடையாக அவ்வன்னை அன்பைப் பெறுகின்றோம். மனித குலம்மட்டும் அந்நன்கொடையைப் பெறவில்லை. இப்பாருலகிற் றோன்றும் உயிரினங்கள் அனைத்தும் அத்தாயுதவியைப் பிறந்தவுடன் பரிசாகப் பெறுகின்றது. நாம் நமது வளர்ச்சிக்குஅத் தாயுதவி வேண்டுமென்றறிந்து கேட்டுப்பெற்றதுமன்று. தாய் குழந்தையி லவ்வாறு தான் ஈடுபடவேண்டுமென அவ்வன்பைக் கேட்டுப் பெற்றது மன்று. ஆனால் இவ்வுலகம் காணப்படும் காலந்தொட்டு அத் தாயன்பும் உயிரினங்களின் வளர்வும் அங்ஙனமே நிகழுகின்றது. தாய்த் தாய்க்கொண்டேகு மிவ்வுலகை நாம் காண்கின்றோம். இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கும் விந்தையை, நாம் ஊன்றி ஆலோசிப்பது கிடையாது. உலகம் காணப்ப

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

## சிவனடியைச் சிந்தை செய்வாம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கர்மத்தையும் எங்கள் சூழ்நிலையை மாற்றக் கூடிய விதமாக ஆக்கிக்கொள்ளலாமென்பதற் கையமில்லை. இதற்காகத்தான் இப்பூமியில் பிறக்கவேண்டியிருக்கிறதென்பதை மனத்தில் நாம் வைத்துக்கொள்ளவேண்டும். இப்பிறப்பிலே சற்கருமம் புரிவதினால் பிராரத்தத்தைப் போக்குவது மல்லாமல், புண்ணியத்தையுஞ் சம்பாதித்து, உன்னதமான தெய்வீக வாழ்வையும் அடையலாமென்பது திண்ணம். எல்லாம் எங்கள் முயற்சியிற் றங்கியிருக்கின்றது. அம்முயற்சி எவ்வளவுக் கெவ்வளவு தீவிரமானதும் சாத்வீகம் பொருந்தியதாகவும் இருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு எங்கள் வாழ்வும் ஆனந்தமுடையதாய் உயர்வடையுமென எதிர் பார்க்கலாம்.

உலகிலே, உன்னத பதவியை யடைந்தோரெனக் கணிக்கப்படும் பெரியார்களின் சீவிய சரித்திரங்கள் நமக்குப் போதிக்கும் விசேஷ கற்பனை யாதெனில், கடவுள் பக்தியால் எல்லாவற்றையும் வெல்லலாம் என்பதே. அதாவது, தன்னை முற்றாகக் கடவுளிடத்தில் ஒப்படைத்துப்போட்டு, தெய்வமிட்டதோடு திருப்திப்பட்டவனாய், தன் வாழ்வைக் கடவுள் சிந்தனையிலேயே கழிக்கப் பழகிக்கொண்டவனொருவன், அவனுடைய சூழ்நிலை என்னவாயிருந்த பொழுதிலும், ஒன்றுக்கும் பயப்படமாட்டான். அவனை ஒன்றும் அசைக்கவும் முடியாது. எதையுஞ் சகிக்கக்கூடிய சக்தியைக் கடவுள் அவனுக்குக் கொடுக்கிறார். அவனுடைய மனம் நிரந்தரமான சாந்தியைப் பெற்றுவிடும். அவனுடைய உள்ளத் தூய்மையால் அவனுடைய முகத்தில் பரிசுத்தம் நிறைந்த களை சொட்டும். அவன் உலகுக்கோர் ஒளிவிளக்காய்ப் பிரகாசிப்பான். அவனுடைய தரிசனையால் சன சமுதாயம் சீரையடையும். அவனோடு சகவாசஞ் செய்பவர்கள் நல்வழிப்பட்டு மனச் சாந்தியை யடைவார்கள். இது கர்ண பரம்பரை அல்லது சரித்திரம் மூலம் மட்டும் நாமறிந்த காரியமல்ல. எங்கள் காலத்திலேதானும் அப்படியான புண்ணியவான்களுள் ஒருவரையேனும் நாம் கண்டுமிருக்கிறோம் · கேள்விப்பட்டுமிருக்கிறோம். ஆகையால் நாமும் அவர்கள் காட்டும் வழியே செல்வோமானால், அவர்கள் பெற்ற பேற்றைப் பெறலாமென்பதற் கையமில்லை.

சிவனடியையே சதா சிந்தனை செய்துகொண்டிருப்பவர்கள் எல்லாச் சீவன்களையுஞ் சிவமாகவே காண்பார்கள். ஏனெனில், எல்லாச் சீவன்களுக்குஞ் சீவனாயமைந்திருக்குஞ் சிவமே தமது சீவனுக்குஞ் சீவனாயமைந்திருக்கிறதென்பதை யவர்கள் தெளிவாயறிவார்கள். ஆகையால், அவர்கள் எல்லாச் சீவன்கள்பாலும் மட்டில்லா அன்பைச் செலுத்துகிறார்கள். சீவதொண்டே சிவதொண்டென அறிந்து அவர்கள் சீவதொண்டுக்கே தங்கள் சீவியத்தை அர்ப்பணஞ் செய்கிறார்கள். தங்கள் சுகத்தையும் பாரார்கள் சுயநலத்தையுங் கருதார்கள். எந்நேரமும் முகமலர்ச்சியுடனும் அகமகிழ்ச்சியுடனும் சற்கர்மம் புரிந்துகொண்டே யிருப்பார்கள்.

அவர்களுக்கு நல்லோர் தீயோர் பெரியோர் சிறியோர், நண்பர் பகைவர் எனும் வித்தியாசங்கள் கிடையா. எல்லாவுயிர்களுஞ் சிவம் எனப் பாவனை செய்வோருக்கு எல்லாம் ஒன்றாகவே தோன்றும். அன்பே அவர்களின் இலட்சியம். அந்த அன்பால் அவர்கள் எல்லாவுயிர்களுடனுஞ் சேர்ந்து கொள்வார்கள். அவர்களுடைய அபார சக்திக்குக் காரணம் அவர்களுடைய தூய அன்பொன்றுமே.

உவமை கடந்த பேரின்பம் தங்கள் உள்ளத்தில் வீற்றிருக்கிறதென்று அவர்கள் திடமாயறிவார்கள். ஆகையால் அவர்கள் ஒன்றுக்கும் அஞ்சமாட்டார்கள். உள்ளும் புறம்பும் இறைவன் சந்நிதானமாயிருக்கும்பொழுது என்ன பொல்லாப்பு நிகழக்கூடும்! ஆகையால் ஒரு பொல்லாப்புமில்லை. எல்லாம் ஈசன் செயல் எல்லாம் நன்மைக்கே. நமது கடன் பணிசெய்து கிடப்பதே. இதுவே அவர்கள் அறிந்தவுண்மை.

கடவுளை இடைவிடாது சிந்தனை செய்வதால் அவர்கள் அவருடைய அருளைப்பெறுகிறார்கள். அந்தவருளினால் அவர்களுக்கு ஞானம் உதிக்கின்றது. சமயவுண்மைகளை யறியக்கூடிய அறிவைப் பெறுகிறார்கள். மேலும் மேலும் கடவுள் வணக்கத்திலேயே முற்றாகக் காலத்தைப் போக்கிக்கொண்டு, உலகத்துக்குப் பயன் படக்கூடியவகையில், தங்கள் தெய்வீக வாழ்வை நடாத்துவார்கள். எனவே,

"சிவனடியைச் சிந்தை செய்வோமே—இந்தச்
சீவன் சிவனென்று தெளிந்து கொள்வோமே.
அவனரு ளாலே அவன்தாள்—நாங்கள்
ஆராதனை செய்து சீராய் வாழ்வோமே."

"ஒரு பொல்லாப்புமில்லை"

## எண்ணெழுத்திகழேல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்வினுந்தியெழும் ஒலியினை வகுத்து, அவ் வுணர்வு இதுவெனப் புலப்படுத்தி நிற்பது எழுத்தே. மனித உள்ளத்தில் உதயமாகும் நினைவு விருப்பம் இலட்சியம் செயலினைத்தை யும், எங்கும், எவர்க்கும், எக்காலத்தும், அறி வித்து நிற்கும் கருவியாயது அது. நம்மை இப் பிரபஞ்சத்திற்கும், இப் பிரபஞ்சத்தை நமக்கும் அறிமுகமாக்கும் ஓர் ஒப்பற்ற கரு வியையே எழுத்தென்கிறோம். எழுத்துறுப் பின் சூலே, மனித உருவைச் சிருஷ்டிப்பது. எழுத்தன்றி, மற்றெதுவும், மனித அறிவைப் பிறப்பிக்கமாட்டாது. எழுத்தொலியற்ற, விலங்கு பட்சியினங்களிலிருந்தும், வேறாய வோர் பகுத்தறிவு, எழுத்தோசையினால் உரு வாக்கப்படுகின்றது. அதுவே மனித அறிவு. அறிவின் பிரகாசத்தை, உயிர்க்கு உலகிற்கு உண்டாக்கும் முதலாய, எழுத்தை அறிதலும் அறிவித்தலும், மனிதப் பிறவியின் பயனும். இதனைத் தெரிவிப்பதே "எழுத்தறிவித்தவன் இறைவனவான்" எனும் மறைமொழி.

இருளை நீக்கி, விடயங்களை விளக்கி நிற் கும் எழுத்தறிவு, மனித வாழ்வின் நிலைக்கள னயது. அதனை வரையறுத்து நிலைபெருக்கு வது எண்ணறிவு. எண் எழுத்து எனும் இரு பிரிவின் ஒன்றிப்பே, அறிவினை விளக்கும் கலையுலகின் மூலமாகும். ஆகவே, பல துறை யில் விரிந்த கலைகளனைத்தும், எண் எழுத்தா கிய மூலப்பொருளின் அடக்கமே. எண்ணின்றி எழுத்தும், எழுத்தின்றி எண்ணும் அறியப் படாமையின், அவற்றின் ஒன்றிப்பே, கலை யுலகின் மூலமாதலை நுனித்தறிந்தும், அவை, அறிவு நோக்குணரும் கண்களாய பெற்றி யைத் துருவி ஆய்ந்துணர்ந்தும், எண்ணெ ழுத்தை இகழாது, கண்ணெனக் காக்கும் கடப்பாட்டை உணர்த்தும், நம் மூதாதைய ரின் பேரறிவு, மண்ணினும் கடலினும் மலையி னும் பெரிதே.

---

## கொள்கையும் நடத்தையும்

"கொள்கைகள் மனத்திற்கு உற்சாகமளிக்கும் வெறும் எண்ணங்களல்ல. ஒருவிஷயத்தைப் பற்றிய நமது ஆழ்ந்த அபிப்பிராயம் அல்லது முடிவே கொள்கை எனப் படும். அதை வாழ்க்கையில் கொண்டு செலுத்துதலே நடத்தையாகும்."

## சரீரலக்ஷணம் சாங்கிய விசாரணை

(ஆறும் பக்கத் தொடர்ச்சி)

ஸங்கல்ப விகல்பா த்யவஸாயாபிமாநாவதாரண ஸ்வரூபா ஸ்சைதே விஷய: மநஸ்தாநம் களாந்தம் புத்தேர்வதநம் அஹங்காரஸ்ய ஹிரு தயம் சித்தஸ்ய நாபிரிதி."

1. மனம்:— வாயுவின் அம்சம். சங்கல்ப விகல்ப வடிவ விருத்தியே மனமாகும். ஆத லால், இது அதன் சொரூப குணமாகிய நினைப்பு மறப்பென்னும் சங்கல்ப விகல்பங் களையே செய்துகொண்டு வாயுவைப்போல் அலைந்து திரியும். இதற்கு அதி தேவதை சந் திரன்; இடம் கண்டம்.

2. புத்தி:— அக்கினியின் அம்சம். பதார்த் தத்தின் சுயரூபத்தை நிச்சயிக்கும் வடிவ விருத்தியே புத்தியாம். இது, காரியாகாரியங் களிலும் பொருள் வகையிலும் இது நல்லது இது கெட்டது என்று நிச்சயித்துணரும். இதற்கு அதிதேவதை பிரமன்; இடம் முகம்.

3. சித்தம்:— அப்புவின் அம்சம். பொரு ளின் நினைப்பு சித்தமாம். இது, இந்திரியங்க ளுக்குச் சலனத்தை யுண்டாக்கி அதன் வழி யாய் விஷயங்களைப் பற்றியிழுத்துச் செல்லும். இதற்கு அதி தேவதை விஷ்ணு; இடம் நாபி.

4. அகங்காரம்:— பிருதிவியின் அம்சம். மாமிஸ பிண்டமாகிய இத்தேகத்தையே 'நான்' என்று அபிமானிக்கும் வடிவ விருத்தியே அகங்காரமாம். இது காரியா காரியங்களை யோசிப்பதை விட்டு 'நான்' 'எனது' என அபிமானித்துப் புண்ணிய பாவங்களைச் செய்து கொண்டிருக்கும். இதற்கு அதி தேவதை ருத் திரன், இடம் இருதயம். இந் நான்கும் தேகத் தில் வியாபித்துக் கொண்டு ஞானேந்திரிய கர் மேந்திரியங்களை அவ்வவ் விருத்திகளில் பிர வேசிக்கச் செய்கின்றன.

### வாயுக்கள் — 10

தசவாயுவின் பெயரைச் சாற்றக்கேள் ப்ராணன்
நிசமார பானனோர் வ்யானன் — வசமாரு
மத்தகையனுக நுதானன் கிரிகரன்றேவ
தத்தன் றனஞ்சய னிதாம்.

### பிரதான வாயுக்கள் — 5

"ஹ்ருதி ப்ராணோ குதேபானோ உதாந: கண்டதேஸ் ஸ்திதா: ஸமாநோ நாபிதேஸேது வ்யாநஸ்ஸர்வ ஸரீரக:"

1. பிராணவாயு :— இது, இருதய ஸ்தானத்திலிருந்து நாசிகா ரந்திரங்களின் வழியாய் மேல்நோக்கி உசுவாசமாகச் சஞ்சரித்துப் பசி தாகங்களை உண்டாக்கிப் புசித்த ஆகாரத்தை ஜீரணம் செய்விக்கும்.

2. அபானவாயு :— இது, குதத்தைப் பற்றி நின்று மலமூத்திரங்களையும் சுக்கிலத்தையும் வெளியில் தள்ளும்படிச் செய்து நிசுவாஸ ரூபமாய்ச் சஞ்சரிக்கும்.

3. உதானவாயு :— இது கண்ட ஸ்தானத்திலிருந்து அன்னத்தை விழுங்கும்படி செய்து அந்த அன்னரசத்தை நாடிகளுக்கு வியாபிக்கச் செய்து சப்தத்தோடு கலந்து குரலோசை செய்விக்கும்.

4. ஸமானவாயு :— இது நாபி ஸ்தானத்திலிருந்து உதானவாயுவினால் அனுப்பப்பட்ட அன்னரஸத்தை நாடிகளுக்குச் சமமாகப் பங்கிட்டு தேகத்தை வளர்ப்பிக்கும்.

5. வியானவாயு :— இது சரீரத்தின் சர்வ பாகத்திலும் வியாபித்து ஸ்பரிசத்தை கிரகிக்கச் செய்யும். மேலும் புசித்த அன்னத்தைத் திப்பி வேறு ரசம் வேறாகச் செய்து கொண்டிருக்கும். இவ்வைந்தும் தேகத்திலிருப்பதனால் ஒருவன் ஜீவித்திருக்கின்றானாதலால் பஞ்சப்பிராணன்கள் எனப்படும்.

## உபவாயுக்கள் — 5

6. நாகன் :— இது கண்டத்திலிருந்து வாந்தியை உண்டு பண்ணும். நேத்திரங்களினால் பார்க்கச் செய்யும்.

7. கூர்மன் :— இது கண்களிலிருந்து திறக்கவும் மூடவும் செய்யும்.

8. கிருகரன் :— இது இடது மூக்கினின்று குருகுருத்துத் தும்மலை உண்டாக்கும்.

9. தேவதத்தன் :— இது மார்பினின்று கபத்தைச் சேர்த்து நெட்டிக் கொட்டாவியையும் விக்கலையும் உண்டாக்கும்.

10. தனஞ்சயன் :— இது கர்ப்பத்திலிருக்கும் பிண்டத்தை வெளியில் தள்ளச் செய்யும். அன்றியும், மரணமடைந்த சரீரத்தையும் விடாமல் காஷ்டத்திற்குப் போகும் வரையில் ஸ்தூலமாகச் செய்யும். இவ்வாயு, சரீரம் தகனம் செய்யும் வரையில் ஸரீரத்திலேயே இருக்கும்.

இந்தப் பத்து வாயுக்களும் பத்து நாடிகளில் திரிந்து கொண்டிருக்கும். அன்றியும்,

பூஸா, அலம்புஸா :— என்னும் நாடிகள் செவியினிடமிருந்து பற்பல சப்தங்களைக் கேட்கச் செய்யும்.

காந்தாரி, ஹஸ்திஜிஹ்வா :— என்னும் நாடிகள் நேத்திரங்களிலிருந்து பதார்த்தங்களைத் தெரியச் செய்யும். இது இருதயத்திலிருந்து மேல் வியாபித்திருக்கின்றது.

சிகீவாலி, குஹூ :— என்னும் இரண்டு நாடிகளும் மல மூத்திரங்களைவிடச் செய்துகொண்டு, அநாகதச் சக்கிரம் முதல் லிங்க குதஸ்தானங்கள் வரை வியாபித்திருக்கும்.

ரக்தவியானன் :— என்னும் நாடி அநாஹத (இருதய)ம் முதல் ஸ்வாதிஷ்டானம் (லிங்கம்) வரையிலும் வியாபித்து அந்தரங்க ஸ்தானத்தில் குஹூநாடியுடன் கலந்து சுக்கில சுரோணிதங்களை ஏகமாய் வெளியில் தள்ளச் செய்யும். இந்த ஏழு நாடிகளும் இருதயத்தை ஆதாரமாகச் செய்து கொண்டு நான்கு நாடிகள் ஊர்த்துவ (மேல்) முகமாகவும் மூன்று நாடிகள் அதோ (கீழ்) முகமாகவும் வியாபித்திருக்கின்றன.

இடை, பிங்கலை:— இவ்விரண்டும் நெற்றிச் சக்கரம் முதல் மூலாதாரம் வரையிலும் வலமிடமாக வியாபித்து அதன் மத்தியில் ஸுஷும்நா நாடியை அநுசரித்திருக்கின்றன. இவை புருவமத்தியி லிருந்து கொண்டு வலது நாசி இடது நாசிகளில் சேர்ந்து பிராணவாயுவை, உசுவாஸ நிசுவாசஸங்களாய் நடத்திக் கொண்டிருக்கும்.

ஸுஷும்ன நாடி: — இது, பிரம்ம ரந்திரம் வரையில் வியாபித்து நாவிற் சேர்ந்து அகாராதிக்ஷகாராந்த ஓசைகளை உண்டாக்கும்.

## தன்மாத்திரைகள்—5.

உன்னவரி தானதன் மாத்திரையைக் கேட்பா
யுரைப்பர் சத்தபரிசமுடன் ரூபரச கந்தம்
என்னுமிவை தமிற்சப்தமது செவியிற் கேட்டு
மியற்பரிச முடம்புசுக மறியும் ரூபம்
கண்ணு முருக்காணும் ரசமினிப்பைக் காட்டுங்
கருதுகந்தம் நாசியினிற் கந்தங் காணும்
சொன்ன வகையைந்து முயிர் கூறுமென்று
சொல்லு கன்மேந் திரியந்தா னைந்துண்டோ.

1. சப்தம்:- ஆகாசத்தின் தன்மாத்திரை. இது செவியின் உட்புறத்திலுள்ள மெல்லிய ஜவ்வின் வழியாய் சப்தத்தைக் கேட்பிக்கும்.

2. ஸ்பரிசம்:- வாயுவின் தன்மாத்திரை. இது, தேகத்தில் பிராணாதி ஸர்வவாயுக்களுடன் வியாபித்திருப்பதால், தொட்டுக் காட்டும் குணத்தை சரீரத்தினின்று அறிவிக்கும்.

3. ரூபம்:- அக்கினியின் தன்மாத்திரை. இது நேத்திரங்களில் அக்கினி ஸம்பந்தித்திருப்பதால், பத்துவித ரூபங்களையும் நேத்திரத்தினின்று காட்டி வைக்கும்.

4. ரசம்:- ஜலத்தின் தன்மாத்திரை. இது நாவில் ஜலசம்பந்த மிருப்பதால் அந்த நாவிலிருந்து அறுசுவையின் பேதங்களை அறிவிக்கும்

5. கந்தம்:- பிருதிவி (பூமி) யின் தன்மாத்திரை. இது நாசியில் (மூக்கில்) பிருதிவி சம்பந்த மிருப்பதால் அந்த நாசியின் வழியாய்ச் சுகந்த துர்க்கந்தங்களை அறிவிக்கும்.

இவை முதலாகிய ஸர்வ இந்திரியங்களும் ஆத்மாவை அறியமாட்டா. ஆகவே, இத்தேகாதி இந்திரியங்கள் யாவும் "ஜடம்" என்றும் ஆத்மா ஒன்றே ஞான சொரூபமாய் இருப்பதால் "சித்து" என்றும் சொல்லப்படும்.

---

## உலகம் உயர்தரப்பள்ளி

(ஏழாம் பக்கத் தொடர்ச்சி)

டும் காலம் தொட்டு ஒரே தன்மையாய்—சிறு சிறு மாற்றங்கள் தவிர—உலகம் நடைபெற்று வருவதால் உலகவழமை அதுவென்ற மட்டில் அமைந்து விடுகின்றோம். ஆனால் இவ்வுலக அசைவு ஒவ்வொன்றும் ஆச்சரியத்துக்குமேல் ஆச்சரியமுடையதாக விருப்பதுண்மை. இவ்வுலக வியக்கத்திலடங்கிக் கிடக்கும் பொருட் பொலிவு கற்றோரையே திணறவைக்கின்றது.

இவ்வுலகை ஊன்றி நோக்கிய சிலர் உண்மை எதுவுங் காணமாட்டாது தயங்கினர். சிலர் உலகைப் பொய்யென்றனர்; சிலர் மெய்யென்றனர்; உலகம் இயல்பாக உள்ளது என்றனர் சிலர். அதனைக் கடவுள் படைத்தார் என்றனர் சிலர். அதனைக் கனவென்றனர் சிலர். மேலறிவு படைத்தோர், இறைவன் அருள் விளையாட்டரங்கமே உலகம் என்றனர்.

"ஒருவனோடொருத்தி யொன்றென் னுரைத்திடு முலக
வருமுறைவந்துநின்று போவது மாதலாலே [மெல்லாம்
தருபவனொருவன் வேண்டுந் தான் முதலீறுமாகி
மருவிடு மநாதி முத்தசித்துரு மன்னிநின்றே.

"அவன் என்றும் அவளென்றும் அதுவென்றும் கூறப்படும் சேதன சேதனப் பிரபஞ்சமெல்லாம் தோன்றும் முறையிலே தோன்றி நின்று ஒடுங்குதலும் உடைமையால், அங்ஙனம் அவற்றைத் தோற்றுவித்து நிலைபெறுத்தி ஒடுக்கும் கருத்தா ஒருவன் வேண்டப்படும். அக்கருத்தா தனக்கொரு முதல்வனின்றித் தானே எவற்றுக்கும் நிமித்த காரணனும் சங்கார காரணனுமாய், இயல்பாகவே பாசம் நீங்கிய ஞானமாகிய சத்திவடிவத்தைப் பொருந்திநின்று, அவற்றைக் காரிப்படுத்தும் இயல்புடையவனும்" எனக் கூறினர், மேலறிவு பெற்ற, மெஞ்ஞானிகள். உலக அமைவின் சித்திரத்தையும் ஒழுங்கையும் போக்கையும் கவனித்ல பேரறிஞர், பிரத்தியட்சமாகக் காணமுடியாத கடவுளின் பேராற்றலையுங்கூட இவ்வுலகப் படைப்பின் அதிசயப் போக்கு மூலமாகவோ மக்கறிவுறுத்துகின்றனர். எல்லாமுல்ல இறைவன் பேராற்றலை நாம் கற்பதற்கு உயர்தரப்பள்ளியயகிய இவ்வுலகமே இடந்தரும்

அறிவு பொதிந்த நூல்களை நாம் கற்கும் பொழுது அந்நூலையாக்கிய ஆசிரியரை, நாம் அறியாவிட்டாலும், அந்நூல் நயம் அவ்வாசிரியரின் பேரறிவையும் ஆற்றலையும் நமக்குப் புலப்படுத்தத் தவறமாட்டாது. அவ்வாறே நமதறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட புதுமையை யுடையதாக விளங்கும் இவ்வுலகம் ஒரு பேரறிவின் சக்தியை நமக்குப் புலப்படுத்துகின்றது. இவ்வுலகமாகிய கலாசாலை நமக்கு விரித்துக்காட்டி நமக்குக் கற்பிக்கும் நூல்களை நாய் மௌனமாக ஆழ்ந்து நோக்கினால் அவை நம்மைப் பரவசப்படுத்துவதோடு ஆழ்ந்த உண்மைகளைப் பதித்துவிடவும் தவறமாட்டா. பள்ளிக்கல்வியாலும், அறிஞர் தந்த நூல்களாலும், கேள்வியாலும் பெறமுடியாத ஆழ்ந்த உண்மையறிவை, இயற்கை நமக்குக் கற்பிக்கவல்லவாம். அனுபவப் பயிற்சி மூலமாக ஆழ்ந்த உண்மை அறிவை ஊறச் செய்வதற்காகவே, இயற்கை ஓயாமல் நம்மை இயக்கிப், பலவகை அனுபவங்களைப் பெறுவதற்கு ஆதாரமாகிய வினைகளில் மெல்ல நம்மைப் புகுத்திவிடுகின்றது. மருத்துவன் சுவைமிக்க இனிப்புணவில் பொதிந்து நோயாறுக்கும் கைப்பு மருந்தை ஊட்டிவிடுவது போல் வாழ்வாகிய நம் விருப்பினூடாக இயற்கை நம்மால் விளங்க முடியாத பல நுட்பமான தத்துவங்களை நமக்கு இலகுவாய்க் கற்பிக்கின்றது. விஷயஞானம் கல்லூரிக் கல்வியினால் நமக்கேற்படுவதன்று. நாம் வாழ்ந்து

கொண்டிருக்கும் உலகமே நமக்கு அதனைத் தோற்றாமல் கற்பிக்கின்றது. உலகமாகிய கல்லூரியில் நாம் பயின்று கொண்டிருக்கும் கல்வி அற்புதமானது. அறிவேறிய மெய்ஞ்ஞானிகளும் அறிவற்ற பாமரமக்களும், வேறு வேறான கல்வியைப் பயில இடங்கொடுக்கும் மாட்சிமையுடைய திவ்வதிசய உலகம். மாசறு காட்சியையுடைய ஞானியர்கட்குத் தெய்வமாகிப் பிறவிப் பெருங்கடல் தாண்டுவதற்குதவும் உலகம், மருணீங்கா மக்களைத் தன்னுளமிழ்த்திக் கொண்டு தத்தளிக்க வைக்கின்றது. கணமும் நாம் வினைகளை யாற்றியும், அவ்வினைப் பயனாகிய அநுபவங்களைப் பெற்று இன்புற்றும் துன்புற்றும், வினைகளின் ஏற்றத் தாழ்ச்சிப் பகுதிகளை அறிந்து கொண்டேயிருக்கின்றோம். ஆகையால் இன்பம் பெறுவதற்கு வேண்டிய வினைகளைச் செய்து வாழவே இயல்பாக விரும்புகின்றோம். ஆனால் இப் பரந்த பூவுலகில் உடம்பு பெற்ற எவ்வுயிர்க்கும் இன்பப் பேறு தனியே நிலைத்ததில்லை. ஒற்றை வெண்குடை நிழலில் ஒரு தனிக்கோலோச்சும் அரசன் ஆதியாக, இரந்தேற்றுண்ணும் ஏழையீறாக இன்பத்தினையும் துன்பத்தினையும் மாறி மாறிப் பெற்று வாழவே காண்கின்றோம். நாம் விரும்பாத துன்பம் நம்மிடைவந்து புகுந்து கொள்ளக் காரணமென்ன? நாம் ஆற்றிய வினையே அதற்குக் காரணமென்பர். அங்ஙனமாயின் நாம் விரும்பாத துன்பத்தினைத் தரவல்ல வினையை யாற்றியதேன் என்றால் அது விளங்க முடியாத இரகசியமாக இருக்கின்றது. இது விளங்காவிட்டால் தொழிலற்றுச் சும்மா இருந்து விடுவோமென்றால் அதுவும் இயலாது. நாமியங்காமலிருக்க உலகமிடந் தராது. யோக சாதனையிலாவது அமர்ந்து விடுவேமென்றால் அதுவே மிகப் பெரிய இயக்கமாகும். அது நமக்குக் கஷ்டமான பகுதி. உலகப் பற்றற்ற மெஞ்ஞானிகளும் கூட ஏதோ ஒருவகையில் இயங்கிக் கொண்டிருக்கவே காண்கின்றோம். அங்ஙனமாயின் இறந்துவிடுவோமென்றால் அதற்கும் அச்சம் மேலிடுகின்றது. இறந்தபின் எம் நிலை எவ்வாறாகு மென்பதும் தெரியாது. ஆகையால் எம் விருப்பப்படி நாம் யாதும் செய்யமுடியாது. பிறந்தால் எப்படியும் வாழ்ந்துதான் தீரவேண்டும். ஆனால் நாம் வாழ்வை வெறுப்பதெல்லாம் வாழ்வின் பயன் அறியாமையினாலேயாம். நாம் வாழும்பொழுது ஆற்றும் வினைகளின் தூய்மையிலேயே, இன்பமும் துன்பமும் தங்கிக் கொண்டிருக்கின்றது வாழ்வு என்பதென்ன? என்பதனை விளங்கிக் கொண்டு வாழ்வேமாயின் இன்பமுந் துன்பமும் நமக்குச் சமநயமாகவே தோற்றும். உலக வாழ்வில் கற்ற அநுபவத்தினூடாக ஒருவர் இவ்வுலகவாழ்வால், தாம்பெற்ற ஊதியம் யாதென நுண்ணறிவோடு எண்ணிப் பார்ப்பாராயின், விஷயவிளக்கமும் அறியாமை நீக்கமுமே, தாம் பெற்ற ஊதியம் என்பதனைத் தெற்றென உணர்வர். கணமும் தன்னறிவைத் தீட்டிக் கொண்டு உலகில் வாழ்ந்தாலன்றி உலகில் முன்னேற முடியாது. ஆகையால் மனிதன் தன் பகுத்தறிவைப் பிரயோகித்துக் கணமும் வாழவே உலகம் மௌனமாகக் கற்பிக்கின்றது. அணுப்பிசகினும் தீவினையோடும் துன்பநுகர்ச்சியோடும் முட்டிக்கொண்டு தவிக்கவே உலகம் இடம்விடும். ஆகையால் இயல்பாக நல்லறிவை மேலோங்கச் செய்வதற்காகவே, வாழ்க்கை அமைந்துபோய்க் கிடக்கின்றதென்னு முண்மையை மக்களுணர்ந்து, செவ்விய நெறியில் வாழ்வாராயின் வாழ்வில் ஏமாற்ற மடையார். உலகம் தமக்குக் கற்பிக்கும் பாடம் மிக இனியதும் இலகுவானது மென்பதனை யுணர்வர். உலகம் மாயா சொரூபமென உலகிற் கஞ்சமாட்டார், பேருண்மை புலனாவதற்கு நிலைக்களனாக விளங்கும் உலகம் கைகூப்பி வணங்கும் பெருமைக் குரித்தானதாம்.

இவ்வுலகின் பெருமையை அறிந்த அறிஞர் சிலர், இறைவன் மூலசக்தியிலிருந்து உலகம் பலவாகப் பரந்து கிளைவிரிந்துள்ளது எனக் கூறினர். எவ்வகையாலும் நாம்பெற முடியாத மெய்யறிவை தோற்றாமல் நம்மில் மெல்ல ஏற்றிவைக்கும் உலகவாழ்வு நாம் கற்கும் உயர்தரக்கல்வியாகும். ஒவ்வொருவரும் உலகில் வாழ்ந்து கொண்டேயிருக்கிறார்கள். ஆகையால் பல கற்றுக்கொண்டுமே யிருக்கிறார்கள். ஆனால் வாழ்வின் பொருளடக்கத்தினை விளங்கிக்கொள்ளாமையால் அதனைக் கல்வியாக நினைவதில்லை. ஏதோ பிறந்தோம் வாழ்கின்றோம், என்றமட்டிலேயே வாழ்கின்றார்கள். தாம் அவ்வாறு வாழவேண்டி அமைந்திருப்பது எதற்காக என்ற ஆலோசனையில் மனதைச் செலுத்துவராயின் உண்மையுணர்வர். நாம் இவ்வாறு வாழவேண்டுமென விரும்பிக் கேட்டு வாழ்வைப் பெற்றோ மல்லேம். ஆனால் வாழ வேண்டிய நெருக்கடி இயல்பாக நமக்கு அமைகிறது.

ஆகையால் ஒருபெருங்காரணத்தை அடிப்படையாகக் கொண்டே உலகம் இவ்வாறியங்குகின்றதென்னு முண்மையை மக்கள் துண்ணறிவால் உணரவேண்டும். மரக்கட்டைகளாக மக்கள் இயற்கையின் தூண்டுதலுக்காக வாழ்ந்து கொண்டிருப்பதைத் தவிர்த்துச் சிறிது மேல்நோக்கித் தம் பகுத்தறிவைப் பிரயோகித்தல் வேண்டும். நாம் எதற்காகப் பிறக்கின்றோம்? எதற்காக இறக்கின்றோம்? எதற்காக வாழ்கின்றோம்? என்ற கேள்வியை அடுத்தடுத்துமனிதன் ஆலோசித்து வரவே தன்னுள்ளத்தி லுண்மைதானாகச் சிறிது சிறிதாக விளங்கத்தொடங்கும். மனிதன் தன் ஆறாவது அறிவைப்பிரயோகித்துஉண்மையறியும் இலட்சியத்தோடு உலகை நோக்கவே இயற்கை தன் மௌனவாக்கால் அவருள்ளத்தில் உண்மை பேசும். இயற்கை தெரிவிக்கும் உண்மை ஒன்றே ஒன்றுதான். ஆனால் அவரவர் அறிவின் ஏற்றத் தாழ்ச்சிக்குத் தகப்பொருட் புலப்பாடு சிறிது வேறுபட்டுப் புலனாகலாம். இயற்கையில் பொதிந்துகிடக்கும் பொருட்பொழிவு அவ்வளவு நுட்பமுடையதாகையால் பேரறிவு படைத்தோருங் கூட அவ்விரகசியத்தை விளக்குமுகத்தா லிடருற்றனர். உயர்ந்த தத்துவத்தைச் சொல்லாலும் எழுத்தாலும் இலகுவில் விளக்கிவிட முடியாது. இவ்வுலகத் தோற்ற அமைப்பில் அடங்கிக்கிடக்கும் உயர்ந்த தத்துவத்தைப் பெரியோர் விளக்கி நமக்கறிவூட்டவே முன்வந்தனர். ஆனால் அச்சூக்குமமான தத்துவம் சொல்லால் விஸ்தரிக்கப்படும் பொழுது, தடித்து மக்களின் அறிவின் தரத்துக் கேற்பவே பொருள் விளக்கத்தினைக் கொடுக்கின்றது. அதனால் உள்ளதாகிய ஒரே ஒரு உண்மை சமயகோடிகளாய் விரிகின்றது.

மாசறுகட்சியையுடைய ஞானியர்கள் அனைவரும் கூறுவது ஒரேஒரு உண்மையைத்தான். இயற்கையின் சக்தி நமக்குப் புலப்படுத்துவதும் ஒரே ஒரு உண்மையைத்தான். "வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின் விளங்குபரம் பொருளே நின் விளையாட்டல்லான், மாறுபடுங்கருத்தில்லை. முடிவின் மோன வாரிதியினதித்திரள்போல் வயல்கிற்றம்மா, எனக் கூறினர் சமயபேதங்களை ஆராய்ந்து முடிவு கூறிய பெரியோர்.

சமய பேதங்கள் எவ்வளவாக இருந்தாலும் எல்லாச் சமயமும் ஒத்துக் கூறும் முடிபு, நம் அறிவு மேலோங்க நாம் உழைக்கவேண்டுமென்பதே. நம் அறிவை வளர்ப்பதற்கு இவ்வுலகமே வாய்ப்பானது. அதற்காகவே நாம் இவ்வுலகிற் பிறக்கின்றோம். காரணமின்றி இவ்வுலகில் பிறக்கவில்லை.

"வந்தவரவை மறந்து மிக்கமாதர் பொன் பூமி மயக்கத்திலாழும்.

இந்த மயக்கை யறுக்க எனக் கெந்தை மெஞ்ஞான வெழில்வாள் கொடுத்தான் சங்கர சங்கர சம்பு" என்ற அறிவுமொழி சிந்திக்கத்தக்கது. நாம் இவ்வுலகில் வந்து பிறந்திருக்கும் காரணத்தை மறந்து உலகத்தில் மயங்கிவிடக்கூடாது. இவ்வுலகம் அறிவுவளர்ச்சிக்கு வேண்டிய கல்வியை யூட்டும் பள்ளியென வுணர்ந்து, உலகை ஆராயவே மக்கள் தம் வாழ்வு முழுதும் கல்விப் பாடமாகு முண்மையைக் காண்பர். இன்பம் துன்பம், உயர்வு தாழ்வு, அறிவு அறியாமையாகிய பல சொற்களை நூல்கள் மூலமாகக் கற்கிறோம். ஆனால் கற்கும்பொழுது அவற்றின் சுயவடிவம் நம்மால் விளங்கப்படுவதில்லை. வாழ்வில் அவற்றைப் பெறும் பொழுதுதான் சரியாக அவற்றை அநுபவமாக அறிகின்றோம். எழுத்தாலும் சொல்லாலும் கற்கமுடியாத பல பாடல்களை நாம் வாழ்வின் மூலம் கற்றுணருகின்றோம். அறிவுவளர்ச்சிக்கு வேண்டிய பாடல்களை ஐயந்திரிபற அநுபவமாகக் கற்றுக்கொண்டிருப்பதே இவ்வுலக வாழ்வு, இவ்வாழ்வைச் சாதாரணமான தெனக் கருதுதல் கூடாது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு கணப்பொழுதும் கல்விநேரமே. ஆகையால் இயற்கையாகியாசிரியன் நமக்கூட்டும் கல்வியே நம் வாழ்வென வுணர்ந்து, நம்வாழ்வின் ஊதியத்தைப் பெறுவதிலேயே, கண்ணுங் கருத்துமுடையவர்களாக மக்களிருத்தல் வேண்டும். வாழ்வால் பெறக்கூடிய ஊதியத்தில் மட்டுமே கருத்துப் படியுமாயின் வறிய வாழ்வும் செல்வவாழ்வும், சம ஸ்தானத்திலேயே தோற்றமளிக்கும். ஆறறிவுடைமக்களனைவரும் தமக்குப் பிரத்தியேகமாகக் கிடைத்த பகுத்தறிவைக் கொண்டு விளங்கவேண்டிய பகுதியில் தம்வாழ்வு என்ன என்ற பகுதியை விளங்கவேண்டியது இன்றியமையாதது. ஏனெனில் இவ்வுலகிற் பிறந்துவிட்டால் வாழ்ந்தே தீரவேண்டும். கட்டாயமாக நிகழவேண்டிய முக்கியத்துவம் பெற்ற வாழ்வைப் பயனுடைத்தாக்கிக் கொண்டிருந்தால் இலகுவாம். வேறுதவம் வேண்டியதில்லை. கணப்பொழுதும் தவமாகிப் பயனளிக்கும். அறிவு ஊற்றெடுக்கும். ஆகையால் உலகமாகிய பள்ளியில் வாழ்வாகிய கல்வியைப் பயின்று விஷயஞானம் பெற்று உண்மையறிவார்களாக.

# ஜகத்திருஷ்டி மனோசிருஷ்டிலயம்

"ஸதேவ ஸௌம்ய இதமக்ர ஆஸீத்"
"தஸ்மிந் மருஸூக்திகா ஸ்தானு ஸ்படிகாதௌ
ஜல ரௌப்ய புருஷ ரேகாதிவத் லோஹித
ஸுக்ல க்ருஷ்ணமயீ குணஸாம்யா
அநிர்வாச்யா மூலப்ரக்ருதி ராஸீத்"
"ஸத்வோத்ரிக்தா வ்யக்தாவரண ஸக்திராஸீத்
தத் ப்ரதிபிம்பம் யத் ததீஸ்வர சைதந்யமாஸீத்
ஸஸ்வாதீந மாயா ஸர்வக்ஞ: சிருஷ்டி
ஸ்திதி லயாநாமாதி கர்தா ஜகதங்குரரூ போபவதி."
ப்ரஹ்மணோ ரவ்யக்த: அவ்யக்தாந் மஹத் மஹதோ
அஹங்கார:
அஹங்காராத் பஞ்சதந்மாத்ராணி பஞ்சதந்மாத்ரேப்யோ
பஞ்சமஹாபூதாநி பஞ்சமஹாபூதேப் யோகிலம் ஜகத்."

இத்தியாதி சுருதிப் பிரமாணங்களின் ரீதியாய், சிருஷ்டிக்குப் பூர்வம் இந்தப் பிரபஞ்சம். நாமரூபங்களும் எந்த விகாரங்களும் இல்லாததாய் நிர்விசேஷ சின்மாத்திர பரப் பிரம்மமாயிருந்தது. இந்தப் பரப் பிரம்மமே அகண்டஜோதியாகிய ஓர் தீபம். அதில் பிரதிபலித்த பிரதிபிம்பமே மாயாசக்தி. ஒரு மாயாசக்தி எப்பொழுது உண்டாயிற்றோ அப்பொழுதே அநேகம் தோன்றும். மித்தியா சொரூபமாகிய மாயையில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு ஈசுவரனென்று பெயர். அந்த ஈசுவரனுக்கு சித்திர விருத்திரங்களாகிய அநேக ரூபங்கள் உண்டாயின.

சலனமாகிய மூலப்பிரகிருதியினால் உண்டாகிய சப்த தன்மாத்திரையாகிய ஆகாசத்தில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு சதாசிவனென்றும், சப்தகுணமாகிய ஆகாசத்தினால் உண்டான சப்த பரிச தன்மாத்திரையாகிய வாயுவில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு மகேசுவரனென்றும், பரிச குணமாகிய வாயுவினால் உண்டான சப்த பரிசரூப தன்மாத்திரையாகிய தேயுவில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு ருத்திரனென்றும், ரூபகுணமாகிய தேயுவினால் உண்டான சப்த பரிச ரூப ரச தன்மாத்திரையாகிய ஜலத்தில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு விஷ்ணுவென்றும், ரசகுணமாகிய ஜலத்தினால் உண்டாகிய சப்த பரிச ரூபரச கந்த தன்மாத்திரையாகிய பிருதிவியில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு பிரமதேவனென்றும் பெயர்கள் உண்டாயின.

பிரபஞ்சோற்பத்திற்குக் காரணபூதமாகிய மாயை பரப்பிரம்மத்தில் ஓர் அணு மாத்திரமென்று சொல்லப்படும். மாயையென்னும் பிரதிபிம்பத்தில் ஆகாசமும் ஆகாசத்தில் வாயுவும், வாயுவில் தேயுவும், தேயுவில் ஜலமும், ஜலத்தில், பிருதிவியும் ஐக்கியமாயிருக்கின்றன. நிராகாரமாகிய பரப்பிரம்மத்தில் தோன்றிய மாயை பஞ்சபூதங்களிலிருந்து ஒன்றாய் சேர்ப்பிக்கப்படும். இப்படி ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டவைகளெல்லாம், ஈசுவரனால் அநேககோடி பிரம்மாண்டங்களான அநேக விசித்திர ரூபங்களுடன் காணப்படுகின்றன. வைரக்கற்களில் நானாவித ரூபங்கள் இல்லாவிடினும் பிரமையினால் பஞ்சவர்ணங்கள் தோன்றுவது போல், பஞ்சபூதங்களினால் பிரதிபலித்த பரப்பிரம்மம் பஞ்சபூத சம்பந்த குணங்களை அனுசரித்து சதாசிவனென்றும், மகேசுவரனென்றும், ருத்திரனென்றும், விஷ்ணுவென்றும், பிரமதேவனென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதில், பிரமதேவன், சப்த பரிச ரூப ரச கந்தமென்னும் ஐந்து குணங்களை உடைய பிருதிவியினால் தாவர ஜங்கம ரூபங்களாகிய பிரபஞ்சமெல்லாம் சிருஷ்டித்தனர். விஷ்ணு சப்தபரிச ரூபரசமென்னும் நான்கு குணங்களையுடைய ஜலத்தினால் சகலப் பிரபஞ்சங்களையும் ரக்ஷிக்கின்றனர். உருத்திரன், சப்த பரிச ரூபமென்னும் மூன்று குணங்களையுடைய தேயுவினால் சகலப் பிரபஞ்சங்களையும் சங்கரிக்கின்றனர். மகேசுவரன், சப்த பரிசமென்னும் இரண்டு குணங்களையுடைய வாயுவினால் மாயா சம்பந்தமாகிய ஜீவகோடிகளுக் கெல்லாம் பிரமையை உண்டாக்குகின்றனர். சதாசிவன் சப்தமென்னும் ஓர் குணமுடைய ஆகாசத்தினால் ஜீவாத்மாக்களுக்கு அறிவை உண்டாக்கு கின்றனர். மாயை என்பது பஞ்சபூத, விகாரமான தேகேந்திரியாதிப் பிரபஞ்சத்தில் "நான்" 'எனதென்னும் அபிமானத்தை உண்டாக்கும். சாக்கிரத்தில் பிரமதேவர், ஜீவனுக்கு பலவித சுக துக்கங்களை உண்டாக்குகின்றனர். சொப்பனத்தில் விஷ்ணு, ஜீவனுக்கு அநேக விநோதங்களைக் காணும்படிச் செய்கின்றனர். சுஷுப்தியில் ருத்திரன், சர்வ சூன்னியத்தை உண்டாக்கி ஜீவனை பிரத்தியேகப்படுத்துகின்றனர். துரீயத்தில் மகேசுவரன், ஜீவனுக்கு பிரமையை உண்டாக்குகின்றனர். துரியாதீதத்தில் சதாசிவன் ஜீவனுக்கு ஆனந்தத்தை உண்டாக்குகின்றனர். சுத்த சூன்யமாகிய மாயை, சுகத்தை மறையும்படிச் செய்து பிரமையை உண்

டாக்கும். சுயம் பிரகாசமாகிய பிரம்மம் சச்சிதானந்த மயமாயிருக்கின்றது.

அப்படிப்பட்ட சச்சிதானந்த பரப்பிரம்மம் மாயாந்தகாரத்தில் அகப்பட்டு வழிகாணாமல் காமக் குரோதாதி பத்து குணங்களினாலும் தாரேஷணை, புத்திரேஷணை, தனேஷணை என்னும் ஈஷணாத்திரயங்களினாலும் பந்தப்பட்டு, தான் ஜீவனென்பதைத் தெரிந்து கொள்ளாமல் துக்கங்களையெல்லாம் சுகமென்றெண்ணி அபரிமிதமான ஆசையில் மூழ்கி அநேக கோடி ஜன்மங்களெடுத்து, சம்சாரமென்னும் மகா சமுத்திரத்தைக் கடந்துபோக சக்தியற்றதாய், துக்கத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும். அன்றியும், பஞ்ச தன்மாத்திரைகளினாலும் பஞ்ச பூதங்களினாலும் உண்டான சராசரப் பிரபஞ்சம், சர்வம் மாயா சம்பந்தமாகிய லீலையேயொழிய வேறன்று. தேகாதிப் பிரபஞ்சமெல்லாம் பஞ்சபூதாம்சமானபடியால் அவைகளையெல்லாம் வேறுபடுத்திப் பார்க்குமளவில் அஞ்ஞானத்தினால் தேகேந்திரியாதிகளெல்லாம் "நான்" 'எனது' என்னும் துரபிமானத்துடன் அகங்கரித்த பிரமையே ஜீவனென்று விசிதமாய்த் தெரியவரும், சர்வஸாக்ஷியாகிய ஆத்மாவே பிரம்மமென்று சொல்லப்படும்.

இந்தக் கூடஸ்த பிரம்மமே, சுயம்பிரகாசமாய் பிரகாசித்துக்கொண்டு அவஸ்தாத் திரயங்களில் காணப்படும் விஷய சுகங்களில் பகுவித பேதங்களை அடைந்தபோதிலும் தான் அபேதமாயும், அவை நசிக்கத்தக்கதாயும் அசத்தாயும் இருந்தபோதிலும் தான் சாசுவதமாகிய சத்தாயும், அவை அஞ்ஞானமயமாயிருந்தாலும் தான் ஞானமயமாயும், அவை துக்க சொரூபமாயிருந்தாலும் தான் சுக சொரூபமாயும் நிர்மலமாயும், நிர்விகாரமாயும், நிர்த்தோஷமாயும், நிர்விசேஷமாயும், சுயம் பிரகாசமாயும், சிதாகாசமாயுமிருக்கும்.

மாயைக்கு உட்பட்டவர்களுக்கு பிரம்ம ஞானம் உண்டாகாததனால் அகங்காரம் விருத்தியாய்த் தீராத துக்கம் சம்பிராப்திக்கும். பிரம்மஞானம் அடைந்தவர்களுக்கு அநேக சித்திகள் தனக்குத் தானாய் லபிப்பதேயன்றி அகண்டானந்தம் உதித்துக் கைவல்லியமும் சித்திக்கும்.

அத்வேஷ்டா ஸர்வபூதாநாம் மைத்ர: கருண ஒவச
நிர்மமோ நிரஹங்கார ஸ்ஸமது: க ஸுக: க்ஷமீ
ஸந்துஷ்டஸ் ஸததம் யோகீ யதாத்மா த்ருடநிஸ்சய:
மய்யர்பித மநோபுத்திர் யோ மத்பக்தஸ் ஸ மே ப்ரிய:

சமஸ்த ஜீவர்களுக்கும் துவேஷம் செய்யாதவனையும், எல்லாரிடத்திலும் சிநேகமுடையவனையும், கருணையுள்ளவனையும் மமதை இல்லாதவனையும், அகங்காரமற்றவனையும், சுகதுக்கங்களைச் சமமாகப் பார்ப்பவனையும், பொறுமையுள்ளவனையும், எப்போதும் நிறைந்த சந்தோஷமுடையவனையும், மனோபுத்திகளை என்னிடம் சேர்ப்பித்து ஆத்மதத்துவத்தில் உறுதியுடையவனையும் இருக்கும் ஞானியாகிய எனது பக்தன் எவனோ அவனே எனக்குப் பிரியமானவன் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த ஞானமடைவதற்காக முதல் பிரயத்தினம் யாதெனில், பிரம் மாம்சத்தினால் தோன்றும் விக்கிரகங்களில் எதையாகிலும் ஒன்றை பக்தி சிரத்தையுடன் பூசிக்கவேண்டும், அப்படிப் பூசிப்பது பரப் பிரம்மத்தைப் பூசிப்பதேயொழிய வேறன்று. பரம பக்தர்கள் தமக்கிஷ்டமான தேவதையை ஆசிரயித்துத் ததேகத்தியான சித்தர்களாய் எப்பொழுதும் பூசித்து நித்தியானந்தத்தை அநுபவித்துக் கொண்டிருந்து கடைசியில் பிரம்மாநந்தத்தைத் தடையின்றி அடைவார்கள். சகுணோபாசனமாய் ஆராதிப்பதை விட்டு நிர்க்குணோபாஸனமாய் ஆராதிப்பது மிகவும் கஷ்டம். எப்படியெனில், கண்களுக்குக் காணப்படும் சொரூபத்திலேயே சரியாய் நிற்காத மனம் அரூபத்தில் எள்ளளவேனும் நிற்கமாட்டாது. ஆதலால், முதலில் மனம் நிற்பதற்கு சகுணோபாசனையைவிட சுலபோபாயம் வேறொன்றில்லை.

ப்ரக்ருதேர்குண ஸம்மூடாஸ் ஸஜ்ஜந்தே குணகர்மஸு
தாநக்ருத்ஸ்ந விதோமந்தாந் க்ருத்ஸ்நவிந் ந விசாலயேத்

மாயையினுடைய முக்குணங்களினால் மோகத்தை அடைந்தவர்கள், இந்திரியங்களுடைய வியாபாரங்களில் அபிமானம் வைக்கின்றார்கள். ஆதலால், ஞானியானவன் ஆத்மாநாத்ம ஞானமில்லாத பாமரர்களுக்குக் கர்மத்தைவிட்டு ஞானமார்க்கத்தில் பிரவிருத்திக்கும்படி போதிக்கலாகாது. போதித்தால் அவர்களுக்கு ஞானமார்க்கம் சித்திக்கவேமாட்

டாது. இந்த ஞானியானவன் கர்மத்தினுல் பிரயோஜனமில்லை என்று சொன்ன வாக்கியத்தை, மோகத்தையடைந்தவர்கள் அதை ஆதாரமாகக் கொண்டு கர்மத்தைமட்டும் விட்டு விடுவார்கள். அதனுல் கர்மபலனுண்டாகக் காரணமுமில்லை. அவர்கள் ஞானசித்திக்கு யோக்கியதை இல்லாதவர்களாய் இரண்டிலும் கெட்டவராகின்றுர்கள். ஆதலால், ஞானியானவன் கர்மமானது ஆத்மதரிசனத்திற்கு ஸாதனமானதென்று சொல்லி, தான் கர்மத்தைச் செய்தும் அவர்களால் செய்வித்தும் காட்ட வேண்டும். இந்தக் கீதையை அனுசரித்தே சகுணோபாசனை இதில் திடமாய் எழுதப்பட்டிருக்கின்றது. இதற்கு முக்கியமான திருஷ்டாந்தம் ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரத்தில் இன்னும் விசேஷமாய் எழுதப்பட்டிருக்கின்றது.

"புங்கார புங்கவிஷயே க்ஷணதத்வரூபிணும்" என்னும் சுருதிரீதியாய் மனிதர்களுக்கு க்ஷணத்திற்குள் அநேக எண்ணங்கள் உண்டாகின்றன. அப்படிப்பட்ட அநேக எண்ணங்களையுடைய மனதை சும்மா இரு என்றுல் இராது. அப்படிச் சும்மா இருப்பதே வெட்டவெளி. அந்த வெட்டவெளி, மனதிற்குப் பிடிபடமாட்டாது. ஆதலால், அநேக எண்ணங்களையுடைய மனதை முதலில் ஓர் எண்ணமாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்காக எந்த ஆலயத்தில் எந்த விக்கிரகத்தின்மீது அதிகப் பிரீதியோ அந்தப் பகவானை உபாசனுமூர்த்தியாகத் தனது இருதயத்தில் நிறுத்தி அந்தரமுகமாய், மனதினுலேயே தரிசித்துக் கொண்டு "தைலதாரமிவாச்சிந்நம் தீர்க்க கண்டா நிநாதவத் உபாஸ்யம் ப்ரணவஸ்யாக்ரம் யஸ் தம் வேத ஸ வேத வித்" என்னும் த்யாநபிந்தூபநிஷத் வாக்கியரீதியாய், அவிச்சிந்நமாகிய தைலதாரை ரீதியாயும் கண்டாநாத ரீதியாயும் இடைவிடாமல் அல்லும் பகலும் அணுவளவேனும் சோர்வை அடையாமல் பிரணவத்துடன் சதாகாலமும் ஸ்மரித்துக்கொண்டு வந்தால், அவ்வப்பியாஸ முதிர்ச்சியினுல் அநேக எண்ணங்களையுடைய மனம் ஓர் எண்ணத்தில் நிற்கும். இப்படி நிற்பதே சகுணோபாசனமென்று சொல்லப்படும். இவ்வாறு நின்ற பிறகு அந்த ஓர் எண்ணமும் சூன்னியமாய் ஒன்றுமில்லாமல் ஆகாசவடிவமாய் நின்று விடுவதே நிர்க்குணோபாசனமென்று சொல்லப்படும். என்றுல், மனம் எவ்விடத்தில் உதித்ததோ அவ்விடத்திலேயே லயித்தபோது சேஷமாய் நின்றது ஆகாசவடிவமேயாகும். பெரியோர்கள், முக்கியமாய் முதலில் சகுணோபாசனத்தினுல் சித்த சுத்தியடைந்த பிறகு, நிர்க்குணோபாசனத்திற்குப் பிரயத்தினப்பட்ட சத்புருஷர்களின் மர்மங்களைக் காணுமல் பிரமித்து, மனம் பரிபக்குவமாகாத மந்தபுத்தியுடையவர்களிற் சிலர் அவர்களைப்போல் தாமும் இருக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு, நிர்க்குணோபாசனத்தை ஆரம்பிப்பார்கள். இது எப்படியிருக்கின்றதென்றுல், புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டதுபோல் சகுணோபாசனத்தைவிட்டு நிர்க்குணோபாசனத்தை அப்பியசித்து, சித்த சுத்தியில்லாததனுல் இரண்டுமற்று பிரஷ்டனுய் துக்கத்தை அனுபவிக்க வேண்டியதாய் நேரிடும். இந்திரியங்களை ஜயித்து மனதையடக்கி காமக்குரோதாதி பத்து குணங்களை விட்டவன் எப்படிப்பட்டவனுயிருந்த போதிலும் நிர்க்குணோபாசனத்தைச் செய்யத் தகுமேயொழிய இதரர்கள் செய்யத்தகாது. விக்கிரக ஆராதனை செய்பவர்களும் பரப் பிரமத்தை திரிகரண சுத்தியுடன் பூசிப்பவர்களுமே பரம பக்தர்களெனவும், பரம பாகவதர்களெனவும் சொல்லப்படுவார்கள்.

முதலில் பக்தி மார்க்கங்களை அவலம்பித்துச் சித்த சுத்தி உண்டானபிறகு யோக சாதனத்தை அனுஷ்டித்து எப்பொழுதும் சர்ப்பம்போல் வாயு பக்ஷணை செய்துகொண்டு, தேகத்திற்கு அபாயம் உண்டாகாவண்ணம் மிகவும் ஜாக்கிரதையுடன் அந்த வாயுவை நாளாவட்டத்தில் கும்பித்து விருத்தி செய்து கொண்டு, அணி மாதி சித்திகளை சுவாதீனப்படுத்திக் கொண்டு சுவேச்சையாய் சஞ்சரித்து சந்தோஷிப்பவர்களே ஸித்தர்களெனப்படுவார்கள். பகவத் பக்தி, யோகாப்பியாசம், சத்புருஷர்களிடம் சாங்கத்தியம் செய்து, இந்திரியங்களை அடக்கி, மனதை நிறுத்தி, தேகாபிமானத்தை விட்டு, பாதத்துவங்களை விசாரித்து, தன்னைத் தானறிந்து பிரம்மானுசந்தானத்தினுல் பகிர் வியாபாரங்களெல்லாம் அறவே மறந்து பிரம்மத்தில் ஏகிபவித்து பிரம்மானந்த ரசத்தைப் பானம் செய்யவேண்டும். அப்படிப்பட்டவர்களே முக்தர்களெனப் படுவார்கள்.

சர்வப் பிராணிகளுக்கும் பொதுவாக ஆஹாரம் சம்போகம் நித்திரை முதலான

விவகாரங்களில் அகப்பட்டுப் புருஷார்த்த சிந்தனையில்லாமல் கேவலம் பசுக்களைப்போல் வர்த்திக்கும் மூடர்களைவிட விக்கிரக ஆராதனை செய்யப்பட்டவர்களே உத்தமர்கள். அவர்களைவிட, பிரம்மத்தை தியானிப்பவர்களே உத்தமர்கள். அவர்களைவிட, தன்னிடத்திலிருக்கும் பிரம்மத்தை தரிசிப்பவர்களே உத்தமர்கள். அவர்களைவிட, சச்சிதானந்த சம்பத்தால் சகலமும் மறந்து சாக்ஷாத்காரத்தை அடைந்தவர்களே உத்தமர்கள். அவர்களைவிட.

"இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு" என்பதுபோல் துரீய திருஷ்டியிலிருந்து சர்வ அவஸ்தைகளிலும் பால உன்மத்த பிசாசர்களைப் போல் ஸஞ்சரித்துக்கொண்டு, பிரம்மானந்த சம்பத்துடன் பிரகாசித்து மகான்களைக் கண்டு பிடித்துப் பரமப் பிரீதியுடன் அவர்களுக்கு அன்ன பானாதிகளைக் கொடுத்து ஆதரிப்பவர்களே உத்தமர்கள். இப்பேர்ப்பட்ட உயர்ந்த பதார்த்தத்தைக் கோராமல் அற்பசுகங்களுக்கு ஆசைப்பட்டு அநேக துரவஸ்தைப்பட்டு கர்மமென்னும் பெருத்த மூட்டையைச் சிரசின் மேல் வைத்துக்கொண்டு சுமக்க சக்தியில்லாமல் முக்கிக்கொண்டிருந்தும், மறுபடியும் சகல பதார்த்தங்களிலும் இச்சை வைத்து பிரதி ஜன்மங்கள் தோறும் 'ஸஞ்சிதம்' என்னும் மூட்டையை அதிகப்படுத்திக் கொண்டிருக்கும் நரபசுக்களைப் பலிகொள்வதற்காகக் காலன் வந்தபோது என்ன செய்வார்களோ யாரை நிந்திப்பார்களோ தெரிய வரமாட்டா. எத்தனை தினங்களிருந்த போதிலும் ஒரு தினத்தில் இச்சரீரத்தை விட்டு ஓடிப் போகப் போகின்றோமென்று தெரிந்துகொண்டு சாசுவத ஜீவனத்திற்குப் பிரயத்தினப்படாமல் காலமெல்லாம் திரவியம். சம்பாதித்து துர்விஷயங்களில் பிரவர்த்திப்பதனால் பெருத்த நஷ்டமேயொழிய லாபமொன்றுமில்லை. பகவத் பக்தியும் ஜீவன் முக்தியும் அடையாத ஜன்மமிருப்பதனால் யாதொரு லாபமுமில்லை. மந்தபுத்தியுடையவர்களுக்கு எத்தனை விதங்களாய்ப் போதித்த போதிலும்,

"கற்பூரப் பாத்திகட்டிக் கஸ்தூரி யெருப் போட்டுக் கமழ்நீர் பாய்ச்சிப் பொற்பூரவுள்ளியினை விதைத்தாலு மதன் குணத்தைப் பொருந்தக் காட்டும், சொற்பேதையருக்கறிவிங்கினிதாக வருமெனவே சொல்லினாலு நற்போதம் வாராதாங்கவர்குணமே மேலாக நடக்குந் தானே."

என்பதுபோல் அவர்களின் பிறவிக் குணம் மாறாமலிருப்பதனால் செவிடன் காதில் சங்கை ஊதியதைப்போல் நிஷ்பிரயோசனமாகும். அஞ்ஞானமென்னும் இருளடைந்த பாழுங் கிணற்றில் மூழ்கியிருக்கப்பட்டவர்களின் மனம் எப்பொழுதும் வெளிக் கிளம்பவே மாட்டா.

சஜாதீய, விஜாதீய, சுவகத பேதங்களில்லாமல் சச்சிதானந்தமயமாய், அகண்டமாய், அப்பிரமேயமாய், நிராகாரமாய், சர்வாதாரமாய், பரிபூரணமாய், பரமார்த்தமாய், பரமார்த்தமாய், நிஷ்பிரபஞ்சமாய், நிர்விசேஷமாய், சர்வபாவமாய், சர்வதோமுகமாய், சின்மயமாய், சித்விலாஸமாய் விளங்குவது கூடஸ்த பிரம்மம். அந்த பிரம்மத்தை அடைந்தவர்களுக்கே ஜனன மரணங்களினால் உண்டாகும் துக்க பரம்பரா நிவர்த்தியும் சர்வ கருமங்களும் நிர்மூலமாய், மோக்ஷ சாம்ராஜ்ஜிய பதவி உண்டாகும். பரமோத்கிருஷ்டமாகிய இப்படிப்பட்ட பிரம்ம ஞானம் உண்டாவதற்கு முதல் சாதனம், தனக்கு இஷ்ட தேவதையை ஆராதிப்பதற்காக சற்குருவை அடைய வேண்டும். இவ்விரண்டும் இல்லாவிடில் சாம்பலில் விட்ட நெய்யைப் போல் விருதாவாகும்.

"ப்ரஹ்மாத்யம் ஸ்தாவராந்தம் பஸ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷா
ப்ரம்மைகமேவ பஸ்யந்தி பரிஸஸ்தம் வியும்த்விஜா :
யஸ்மிந் பாவா : ப்ரலீயந்தே லீநாஸ் சாவ்யக்ததாம் யயு :
பஸ்யந்தி வ்யந்ததாம் பூயோ ஜாயந்தே புத்புதா குல."

சகல நதிகளும் சமுத்திரத்தில் கலந்து பேதமில்லாமல் ஏகமாவதுபோல், பிரமாதி தாவர பரியந்தம் சகல சராசரஜகத்து எந்த பரப்பிரம்மத்தில் உண்டாயிற்றோ அந்த பரப்பிரம்மத்திலேயே பிரளயத்திலயித்து விடும். சமுத்திரத்தில் அலைகள் நுரைகள் திவலைகள் உண்டாவது போல், மறுபடியும் அந்த பரப்பிரம்மத்திலிருந்தே சகல சராசரஜகத்துக்களும் உண்டாகிக்கொண்டிருக்கும். ஆதலால் சமுத்திரஜலமே அலைகள் நுரைகள் திவலைகளாய்த் தோன்றுவது போல் பரப்பிரம்மம் ஒன்றே நானாவித நாமரூபங்களுடன் சகல சராசர ஜகத்தாய்த் தோன்றுகின்றதே யொழிய பிரம்

(தொடர்ச்சி 20-ம் பக்கம் பார்க்க)

சிவதொண்டன்

நந்தன௵ மார்.—தை௴ (டிச. 1952 ஜன.—பெப். '53)

# சிவதொண்டன் ஆண்டுநிறைவு

சிவதொண்டன் தன் பதினாறாட்டைப் பருவம் நிறைவெய்தப்பெற்று இத்திங்களோடு பதினேழாட்டைப் பிராயத்தை அடைகின்றான். இப் புத்தாண்டுமலர் பொங்கும் மங்களத்தோடு தொடர்ந்து மலர்கின்றமை சாலவும் பொருத்தமுடையதேயாம். "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு" என்றார் நக்கீரர். "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்றார் இளங்கோவடிகள். பண்டைக்காலந் தொட்டுத் தமிழ் மக்கள் ஞாயிற்றை வழிபட்டு வந்தனர் என்பதற்கு இவை போதிய சான்றாகின்றன. பொதுவாக ஞாயிற்றுக்கிழமை தோறும் ஞாயிறுவழிபாடு நிகழ்த்துவோர் நம்நாட்டிற் பலருளர். ஆண்டிலே சிறப்பாக ஞாயிற்றை வழிபடும் நாள் தைத்திங்கட்பிறப்பாகும். இதுவே தமிழர் ஆண்டுப்பிறப்பு என்றும் கூறப்படும். சிறுவர்முதற் பெரியோர்வரை அன்று புலர்வதற்கு முன்னமேயே துயில்நீத்து, தூயநீரில் ஆடி, தூய ஆடைதரித்து முன்றில்களைக் கோலத்தால் அணிபெறச்செய்து வெடிகள் அதிரப் பொங்கல் பொங்கி மகிழும்காட்சி எம் நாட்டில் இத்திங்களிலேயே நடைபெறுகின்றது, நடைபெற்றது. இப் பொங்கல் மங்களத்தைத் தொடர்ந்து சிவதொண்டன் பொங்கும் மங்களத்தோடு மலர்கின்றான்.

இன்னும் தைத்திங்கள் உத்தராயண புண்ணியகாலம் தொடங்குங் காலமாகும். தேவர்களுக்கு விடியற்காலம் என்று போற்றப்படுங் காலமுமாகும். திருஞானசம்பந்தர் பூம்பாவையை விளித்து "தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்" என்று விதந்தெடுத்துப் பேசிய பூசநாளும் இத்திங்களிலேயே கொண்டாடப்படுவதாகும். இத்தகைய அரிய திங்களில் பெரிய பொருள்கள்பற்றி அறிஞர்கள் பேச அவற்றை ஏற்று ஏத்திக்கொண்டு பாநலம் வாய்ந்த புலவர்கள் நாவார மனமார வாழ்த்த, புத்தாடை போர்த்து, தென்முகக் கடவுளின் திருவுருவை முன்னிறுத்தி வழிபட்டு, ஞான நற்சிந்தனையிற் றோய்ந்து திளைத்துக் கண்ணும் மனமுங் கவரும் ஒண்ணிதிச் செல்வனாய் மிளிர்கின்றான். தொண்டன் வருகையை நோக்கி வருகைப் பருவம் பாடிக் கொண்டிருக்கும் அன்பர்களை அவன் மனமார அறிவானாகலின் அவன் விரைந்து வருகின்றான். காலந்தாழ்த்தியிருப்பானாயின், அதுவும் தொண்டுக்காகவே காலந்தாழ்த்தியிருப்பான். பாதகங்களுக்குக் காரணமாகும் பொருள்களில் ஒன்றிரண்டை ஒல்லும் வகையில் நீக்கியபின் உங்களைக் காணின் உத்தமம் என்று உத்தேசித்திருப்பன். கருமம் என்றும் பூரணப்படுவதில்லை. கருமத்தைச் செய்து மனிதன் தன்னைப் பூரணமாக்கிக் கொள்ளுகிறான் என்ற உண்மையை உணர்ந்தவன் தொண்டன். உணர்ந்ததை எல்லோருக்கும் உபதேசிப்பவன் சிவதொண்டன். பலன்கருதாது உழைத்தலே அவன் உயரிய குறிக்கோள். அக்குறிக்கோளை உஞற்ற வேண்டிய உரத்தோடு போந்து பொலிகின்றான். பதினேழாட்டைப் பிராயம் அத்தகைய உரத்துக்கு அமைந்த ஆண்டுதான் என்பதை எவரோ மறுப்பர்!

அருள் நிறைந்த ஒருபெருங் கடவுள் போலவும், அறிவுசான்ற வித்தக ஆசானாகவும், அன்பு அளைந்த நண்பனாகவும் இயல்பு திரியாது என்றும்போல இன்றும் உங்களை நோக்கி வரும் தொண்டனை வாழ்த்துவீர்களாக; வரவேற்பீர்களாக.

வாழ்க தொண்டன்; வாழ்க தொண்டு;
வாழ்க மெய்யன்பர்; வாழி இவ்வையகம்
வாழ்க வாழ்கவே.

---

**நற்சிந்தனை**

காசி, 30-11-40

தேடித் திரிந்து காசிக்கு வந்து கண்டேன் விசுவநாதனை என்னுள். வாடித்திரிந்து வருந்த வேண்டாம். தேடியபூடு காலுக்குள்ளே என்ற தெவிட்டா வாசகமொன்றுண்டு. இவ்விடத்திலும் மனிதர்களெல்லாம் எங்களைப் போலே தானிருக்கிறார்கள். நூதனமான காரணமொன்றும் பூதலமீதிலில்லவே இல்லை. இருந்த இருக்கிற இருக்கும் யாழ்ப்பாணத்தாரெல்லாருக்குமாகக் கருமாதிகளெல்லாஞ் செய்து முடித்து விட்டது. இனிமேலுங்களுக் கியைந்தபடி அன்பாக உலகில் நடந்து ஆண்டவன் அடிக்கீழ் அமர்ந்து வாழ்க.

# நற்சிந்தனை

## வெண்பா

1. ஒருபொல்லாப் பில்லையென ஓதும் திருவாக்கால்
உருகி யுருகி யுணர்வற் — றிருநிலத்தில்
இன்பதுன்பம் என்னுமவை என்றுமொப்பாந் தன்மை
என்னப்பன் செல்லப்பன் என்று [கண்டேன்]

2. உண்மை முழுதுமென ஓதுந் திருமொழியின்
தன்மையினைக் கண்டேன் தலைப்பட்டேன் — பின்னைப்
பிறப்பும் இறப்புமிலைப் பேதைமட நெஞ்சே
மறவாமல் ஏத்தி மதி

3. முடிந்த முடிபென்று முன்னின்று சொல்லப்
படிந்ததென் உள்ளம் பதியில் — முடிந்ததே
மாயவிருள்; மந்திரமும் தந்திரமும் நான்மறந்தேன்;
தாயனைய செல்லப்பன் தான்

4. நாமறியோ மென்று நகைத்தென்னை நோக்கிக்
காமங் கடந்தோன் கழறினன் — சோமுடன்
சிந்தித்துச் சிந்தித்துச் சேவடியே தஞ்சமென்று
வந்தித்து நின்றேன் மகிழ்ந்து

5. ஆரறிவார் என்றே அடிக்கடி யேநகைக்கும்
பேரறி வாளனையும் பித்தனென்றே — பாரிற்
பலரே இகழுவார் சில்லோர் புகழ்வர்
சலனமற்று வாழுவார் தாம்

6. கரைகாணா இன்பக் கடலாடு வானை
உரையாட யாருக்கிங் கொல்லும் — தரைமீது
நால்வேதங் காண்கிலவே நற்றவத்தோர் தாமறியார்;
மால்பிரமன் தேரார் மதி

7. ஆசைக் கடலி லலைந்து திரிவார்கள்
ஆசை கடந்தவனை ஆரறிவார் — மாசற்ற
மேகத்திற் சந்திரனை மின்மினிதான் மூடுமோ
மோகத்தை யின்றே முனி

8. உயர்ந்ததிருக் கோபுரமும் ஓங்கெயிலுங் கண்டு
வியந்து விழுந்தெழுந்து விம்மி — அயர்ந்துநிற்கும்
ஆடவரும் மங்கையரும் மற்றுள்ள அன்பர்களும்
பாடவரு வார்தினமும் பார்

9. எட்டும் இரண்டும் அறியாத என்னையும்
நட்டஞ்செய் செல்லப்பன் நல்லூரில் — திட்டமுடன்
நீயேநா னென்று நினைந்துருக வைத்தனனே
தாயே யனையா னவன்

10. ஆதியந்த மில்லையென்று சொல்லாமற் சொன்னான்
நீதி நெறிவிளங்கும் நல்லூரில் — வீதியிலே [காண்]
என்னைத்தா னாக்கி எடுத்தாண்டான் யாரென்னின்
அன்னையொத்த செல்வன் அறி

# தவஞ் செய்தல்

தவம் செய்தலே தன் கருமம் செய்தலாம்; மற்றையவற்றைச் செய்தல் வீணேயாம். தவம் செய்வார் முன் சிவம் சென்று எவ்வூழியமும் செய்யும்.

உடம்போடு கூடி வாழ்கின்ற எவ்வுயிர்க்கும் எவ்வகைத் துன்பமும் செய்யாமையும், தன்பால் வரும் துன்பங்களை யெல்லாம் சந்தோஷத்தோடு கொள்ளுதலும், கடவுளைத் தியானித்துக் கொண்டிருத்தலும் தவமாகும்.

தவச் செயல்களாகிய மூன்றில் ஒன்றைச் செய்யின், மற்றைய இரண்டும் கைகூடும்; நாம் மூன்றையும் செய்து கொண்டு வருவோமாயின், நமது மூன்று காலங்களின் பாவமெல்லாம் நம்மைவிட்டு நீங்கிவிடும்; பின்னர் நாம் உலகத்தில் உயர்ச்சியை அடைவோம்.

பிற உயிர்களுக்குத் தீங்கு புரிவதற்கு முக்கிய காரணம் மூன்றென்பதும், அவை சாதி பேதமும் மத பேதமும் காமமுமாம் என்பதும் கூறப்பட்டன.

உலகத்திலுள்ள பலவகை உயிர்களும் கடவுளிடத்துத் தோன்றியவை யென்பதும் கடவுள் ஒருவனே என்பதும் எல்லோர்க்கும் ஒத்த முடிவுகள். அவ்வாறிருக்க அவ்வுயிர்கள் சாதிபேதம் மதபேதம் உண்டென்று கூறுதல் பிழையே யன்றிப் பிறிதன்று.

மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களாலும் இவ்வுலகிலுள்ள எவ்வுயிர்க்கும் எவ்வளவும் தீமை புரியாதும் காமம் இல்லாதும் எவ்வுயிரையும் நேசிக்கின்ற நடையால் சிலர் மேலோராக மதிக்கப்படுவர்; முக்கரணங்களில் ஒன்றால் உயிர்களுக்குத் தீங்கு இழைத்தலாலும் காமத்தைக் கொள்ளலாலும் மற்றையோர் கீழோராக மதிக்கப்படுவர்.

உயிர்களுக்குத் தீங்கிழையாமையும் காமமில்லாமையுமாகிய ஒழுக்கமே கடவுளை அடைதற்கு மார்க்கமென்றும், உயிர்களுக்குத் தீங்கிழைத்தலும் காமத்தைக் கொள்ளுதலுமாகிய இழுக்கமே கடவுளைவிட்டுப் பிரிக்கும் மார்க்கமென்றும். ஆசிக மத நூல்கள் அனைத்தும் கூறுதலால் அவ்வொழுக்கத்தை நன்கு உணர்ந்து கைக் கொள்வதற்கு எஞ்ஞான்றும் முயல்வாயாக.

இவ்வுலகத்திலுள்ள சகல உயிர்களும் கடவுளுடைய குழந்தைகளென்றும் சகல உயிர்களின் உடல்களும் கடவுளது வீடுகளென்றும் நீ ஞாபகத்தில் வைத்து எவ்வுயிர்களுக்கும் எள்ளளவும் தீங்கு புரியாது மேம்பாடு அடைவாயாக; அவ்வாறு யாதாம் ஓர் உயிர்க்கும் தீங்கு புரியாது மேம்பாடு அடைதல் கடவுளோடு சேர்தற்கு வழி யென்று அறிவாயாக.

உனது சரீரத்திற்காவது மனத்திற்காவது துன்பம் நேர்ந்தால், அவை துன்பத்தை யுறுதல் இயற்கை யென்றும், அத்துன்பத்தை உறவால் உனது அறிவின் மாசு நீங்கி அது பிரகாசத்தை அடையுமென்றும், அத்துன்பம் உனது நன்மைக்காகக் கடவுளால் உனக்குக் கொடுக்கப்பட்டதென்றும் அறிவாயாக.

எவ் வெவர் எவ்வெப் பெயர்களால் கடவுளை அழைப்பினும், எவ் வெவர் எவ் வெவ் விலக்கணங்களைக் கடவுளுக்கு ஒற்றினும், கடவுள் எப்பொழுதும் ஒருவரே. நீ ஒழுக்கத்தோடு நின்று கடவுளைத் தியானித்து வருவாயின், இவ்வுலகத்திலே இக்கணத்திலேயே புருஷார்த்தமாகிய நான்கையும் நீ அடைவாய்.

---

## ஜகத்திருஷ்டி மனோதிருஷ்டிலயம்

(தொடர்ச்சி 17-ம் பக்கம்)

மத்தைவிடப் பிரபஞ்சம் வேறானதல்ல. ஞானிகள் சகலப் பிரபஞ்சங்களையும் பரப்பிரம்மமாய் பாவிப்பார்கள். ஆனால் சமுத்திரஜலமே அலைகள் நுரைகள் திவலைகளாய் எத்தனை விசை நாமரூபங்களாய் சமுத்திரத்தில் தோன்றி மறுபடியும் ரூபமில்லாமல் சமுத்திரத்தில் லயித்த போதிலும் சமுத்திரஜலம் மாத்திரம் எவ்வித விகாரங்களுமில்லாமல் ஒரே விதமாய் இருப்பதுபோல், பிரமாதி சகலப் பிரபஞ்சமும் நாமரூபங்களுடன் தோன்றி மறுபடியும் பிரளயத்தில் நாமரூபங்களில்லாமல் லயித்த போதிலும் பிரம்மம் மாத்திரம் எவ்வித விகாரங்களுமில்லாமல் ஒரேவிதமாய் இருக்கும்.

The Sivathondan

# REFUGE WITH THEE.

" SURE FOR THY CHILD THERE IS REFUGE WITH THEE"
TREMBLING WE TAKE UP THE CRY.
HEAR, O! OUR LORD, WHILE WE BRING THEE ONE PLEA,
GRANT BUT ONE BOON FOR OUR JOY.
MAY ONLY THY LOVERS REST ON OUR BREAST,
LET OUR HANDS LABOUR BE THEIRS.
ONLY ON SUCH OUR EYES NIGHT AND DAY REST,
THEN SUN RISE WEST, EAST. WHO CARES ?

—ELOREMBAVAY

[MANIKKAVACHAKAR]

# ACTION

—oOo—

Karmanya karma yah pacyed karmani
cha karmayah
Sa budhiman manushyeshu
Sa yukthah krsna karmakrth.

"HE who sees inaction and action in inaction is wise among men. He is in a state of yoga whatever he may be doing."

It is a matter of common knowledge to all of us that our existence on earth implies that we have to perform karma or action. An interesting fact to note is that the word 'quick' meaning 'to be active' comes from a word which means "to live". The implication is that all living things whether bird, beast or man cannot escape action or the fruits thereof. Birds and beasts in the course of their lives act upon inherited instincts with hardly any trace of ratiocination, whereas man believes himself to be guided by more than mere instincts. The exercising of the reasoning faculty, found in varying degrees of development in different people, determines the nature of the karma performed by individuals. When Yudhishtira wants the restoration of Nakula, his cousin, he is guided by a perfectly developed reasoning faculty, hardly to be met with among men. When action is dictated by balanced reasoning that is consistent with dharma. Sinners and evil doers are immersed in Maya and their inner

*(Continued on page 32)*

# PRATYAHARA

## (ABSTRACTION OF SENSE)

Pratyahara is withdrawal of the senses from their respective objects. It is abstraction of the senses.

Real, spiritual, or inner life begins when the Yogic student is established in Pratyahara.

Pratyahara checks the outgoing tendencies of the senses.

The excited senses of even a wise man, though he be strong, impetuously carry away his mind.

The practice demands considerable patience and perseverance. It is a trying discipline of the senses.

The senses cannot do anything without the co-operation of the mind. If you can disconnect the mind from the senses, there will be abstraction of the senses automatically.

Just as the bees fly when the Queen flies, and sit when the Queen sits down, so the senses become restrained when the mind is restrained.

Pratyahara is that by which the senses do not come in contact with their objects and, as it were, follow the nature of the mind.

If the senses are uncontrollable, the Yogic student cannot achieve success in Yoga.

Abstraction consists in the senses becoming entirely assimilated in the mind.

Then follows the greatest mastery over the sense.

Control of the senses is absolute one-pointedness of the mind.

The senses are held in check by the practice of Pratyahara.

### How to Practise Pratyahara?

Practise withdrawal of the senses one by one. Deal with the most turbulent sense at first.

Withdraw the senses gently from their objects. If you drag them vehemently, you will experience headache.

Detach your mind from the centres of external objects. Do not allow it to join itself to the centres. You will succeed in Pratyahara.

Withdraw the mind, the Prana and the senses. This is triple withdrawal. This is very powerful.

Just as a tortoise draws in on all sides its limbs, so also the Yogic student withdraws all his senses from the objects of the senses. Then his understanding is well-poised.

Just as a turbulent storm tosses a ship so also the hidden desires toss the roving senses and the mind vehemently. Therefore, beware. Be on the alert. Be eternally vigilant. Annihilate all desires with the sword of dispassion and axe of discrimination,

During the practice the senses will run again and again towards the objects like a wild bull.

Withdraw them again and again.

### Aids to Pratyahara

No amount of human effort can give perfect success in Pratyahara. It is divine grace alone that can secure perfect success. Therefore, persevere and pray.

Pratyahara becmes easy after the practice of Pranayama.

Pratyahara follows the practice of Pranayama automatically.

If you have intense dispassion you can practise Pratyahara easily.

Dispassion is the enemy of the senses and friend of Pratyahara.

Observance of silence, moderation in diet, steadiness in pose, dispassion, regularity in the practise of Pranayama, patience, contentment, perseverance, tenacity, celibacy, seclusion are all aids to Pratyahara.

*(Continued on page 28)*

# SELF - PURIFICATION

It ia a mark of Divine Grace to have noble aspirations. There are very few people who have some good tendencies, who at least aspire after some higher form of living. Most people just rush headlong into sea of the world and worldly enioyments, and are drowned.

There are two alternatives before us: His infinite Bliss, or the pleasures of the senses. The two can never be combined, whatever some people may say. 'Where Kama is, there Rama cannot be; where Rama is, there Kama cannot be.' Only by giving up all sense enjoyment and egotism can Bliss be attained. Never by any other means. We always see the faces of other people, but we rarely see ourselves in a dispassionate way. Our mind is outgoing, instead of being introspective; and with this outgoing mind nothing higher can be achieved. Unless you purify the mind through unbroken continence, and then give it an inward turn, there is not even the possibility of any spiritual life. This is an eternal law which can never be changed. There are sôme blessed souls who just shut up the shutters of their senses and then with indrawn mind try to realise the Truth.

Spiritual life begins when we stop the outgoing tendencies of the mind and become introspective. Not before. It begins only when we learn to draw our mind away from the senses; but this means a terrible strain and struggle. There must be tremendous outward control while trying to gain the inner control; and it takes a long time to make this life free and natural. In the beginning a complex is formed, but that does not matter, as later on with the disappearance of our false sense of personality, our false, ' I ', the complex also disappears. Our mind should constantly serve us as a looking-glass, i. e. we should constantly watch its movements, become fully aware of all the thoughts that are rising in it. Mind is the greatest recorder, but unfortunately, we do not notice it; we do not care what happens in our mind. We are thoughtless and careless in everything that is spiritual, and worldly-wise in all our outward activities. Thus no progress can be made. Some minds are so dirty, so covered by lust and greed, that even a looking glass would not help. Such people cannot be helped, however hard we may try to. They are helpless.

A really introspective mind always brings home to us all the facts that are taking place within ourselves. We must become wide-awake and fully aware of every thought that rises or wants to rise in our mind. This is one of the very first steps in spiritual life. Without getting control over our mind, we cannot advance, and without becoming aware of what is taking place in our mind, we can never control it. So this is one of the very first steps in spiritual life. We should be wide-awake and definite in all we do.

There are some who will just turn their face to the south when they want to go to the north, and when you ask them why, they say they are going east. (Bengali proverb).

Two paths are before us. We must decide which path to take; and once we have decided to take the higher path, we must do our best to follow it with unflinching perseverance and steediness, whatever happens. Temptations are very great because of our former life, because we did not lead a perfectly pure, perfectly non-attached life. Whoever has led a perfectly pure life from his childhood does not find it very hard to overcome worldly temptations. They are more or less like shadows to him.

Sometimes, in aspirants old impure desires and pictures come up, old passions rise with all their violence, even impressions which seemed very weak rise with full force, especially during meditation. All the Great Ones had to pass through temptations, but their mind never turned to the pleasures of the senses. Look at the Christ's life, Sri Chai-

tany's life ! What tremendous purity, physical and mental ! Sri Ramakrishna could never think of woman in any other form than that of the Mother.

All the 'old friends' come to us again and again and try to disarm us; and we are still to some extent moved by them. As soon as real dispassion dawns in us, we shall be able to face them wholly unmoved, and then they will cease to appear. So do not be cowed down when the 'old friends' come, but face them boldly. Face the brute. This elimination of the past impressions is very slow, very lengthy process.

Once upon a time there was a man who had a dog. He was very, very fond of his dog and always kept it near him, petting it and doing everything for it. But one day it so happened that that man got tired of the dog and did not want to keep it any longer. So he gave it some hard kicks to make it go away. But the dog came again, not being able to believe that its master did not want it any longer. This went on for some time, the dog coming back to its master and the master giving it more hard kicks. But one day the dog realized that its master really did not want it any more and left the master. This is just our case. We have been pandering to our senses, allowing ourselves to be swayed by them, doing everything they asked us to do, never showing any real resistence. So here, too, it will take the senses a long time till they realize that their wishes are not going to be fulfilled any longer.

At present, part of our mind wants sense-enjoyment and sense-life, part of it does not want it any longer. So there is a terrible tug-of-war between the two parts. You must develop a definite antipathy for sense-enjoyment and all persons who may become a danger to you; you must make the "dog" feel that it is not wanted. The 'dog' is our pet desires, our pet passions, our pet likes and dislikes, and they all must be given some really hard kicks.

During these moments of trial the aspirant should always pray from the very bottom of his heart to the Lord for purity, for strength. Ask Him to efface all the old impure impressions taken in through carelessness and thoughtless living, and efface them for ever from the mind so that they cannot come back. In the Bhagavad Gita it is said, "When we turn our mind away from the senses, the sense-objects remain away from us; but still there is the deep-rooted tendency created by our previous habits." Pray thus: "Thou art strength, endow me with strength. Thou art energy, endow me with energy."

You must try to develop aversion for all things that attract your senses or are apt to rouse old associations in you. Even disgust for some other person may be created for a time. Later on, the aversion, this disgust, has to be transcended too. The moment you get real dispassion for the world, the moment real disgust for all worldly enjoyments is created, the problem is solved. Then we come to taste something that is sweeter than these so-called pleasures of the senses, which are a very poor affair after all.

Once when the temple procession was going on round the streets, Sri Ramanuja came out just to pay homage to the Image but in the midst of the crowd he found a man and a woman. All the time this man was looking at the face of the woman, not taking any notice of the procession and holy Image. Such was his absorption in the face of his mistress. "The Lord is taken out in procession, why is it that you are looking at this woman" asked Sri Ramanuja, "O Sir, her nose is so beautiful ! You see, she is my mistress, and her nose is so beautiful ! " was the answer. Then out of this infinite grace, Sri Ramanuja showed the man something infinitely more beautiful than the face of the woman. The man and woman both gave up their sinful living and became great saints,

*(Continued on page 31)*

# KASIPANCAKA

——oOo——

The *Kasipancaka*, a well-known hymn of Sri Sankaracarya, describes the importance of Kasi, the holiest of the holy cities for all Hindus. It is remarkable, since the Acarya identifies the *Jivatman* with the sacred city; and in that respect it stands unique, being the only for hymn of its kind. The hymn has a message all pilgrims that there awaits them the great treasure—the treasure of Self-realisation.

Visiting sacred places and bathing in sacred waters have always been a very popular form of religious practice amongst all religionists and particularly amongst Hindus; and it continues to be so even in these days of irreligion. An indication of this may be mentioned: the average floating population of the city of Banares is about a lakh every day. Naturally therefore a pilgrimage to Kasi is the cherished ambition of every pious Hindu and almost all Hindus who have the requisite health and wealth do satisfy this religious craving of theirs some time or other in the course of their life. This is, no doubt, an education in itself, and often enough it does create a very healthy attitude of mind. Even today, in spite of the numerous facilities afforded to the travelling public, a pilgrimage often means certain inconveniences and discomforts, and it serves as a lesson in self-denial and a curb on egoistic tendencies. Besides, it does beget in pilgrims to Kasi, those particularly who are sincere, an attitude of mind which is the first reguisite to religiosity. Those who can see with their eyes, hear with their ears, feel with their hearts and think with their minds do certainly benefit much by a pilgrimage to that sacred city. For, in the main, it tends to humanise man. In the eyes of the Acarya, however, the most important result is the gaining of *Santi* (peace) and *Jnana* (knowledge) which alone can lead to the realisation of the Godhood of man. Whoso gains this realisation of the Self is alone the true pilgrim, and such a pilgrim, when returns and lives in terms thereof, enriches the lives of those amongst whom he lives. The hymn thus sets forth the nature and value of the treasure awaiting pilgrims to Kasi—treasure of self-realisation : only they have to *'seek, search and find it'* if they wish to enrich themselves by that treasure.

On this basic idea is the hymn elaborated. The sacred Ganga is identified with the *Jnana pravaha*, since both alike consume all kinds of sins, including the sin of ignorance. Manikarnika is *Santi*—peace absolute—which results from the cessation of all mental activities in the shape of running after *Visayas*. Indeed, this lesson it teaches every responsive heart even today, only the lesson is soon forgotten by the worldly-minded. For, here we see in continued succession the cruel havoc wrought by Death—the havoc that none can escape; and one cannot help feeling a touch of remorse that during the short span of life alloted to man, he must be running after ephemeral things and not after the main purpose of life, namely Self-realisation. *Bhavani*, the Mother of the Universe, and Visvanatha, the Lord of the Universe, are *Buddhi* and *Atman* respectively, which are manifest, to a greater or lesser extent, in every individual. The *Pancakos'as* are the five sheaths of the soul, and the city is itself the human body. Thus every one is himself Kasi with all that it stands for. So a pilgrimage to the holy city directs our minds to what forms the eternal verities and conveys to us the intimations of our own immortality: in other words, it helps us to realise the Self. Blessed are they who realise this result—the realisation of his self and with that of all selves—*my* self, *thy* self and *his* self, or, in other words, the Supreme Self.

An average man of today, filled with doubts and disbeliefs and living under the stress and strain of conflicting ideas and ideologies, would be tempted to treat as more poetry the interpretation advanced by the Acarya. He might find in a pilgrimage to Kasi not much more than what he might find in a visit to any other city. This does not, however, mean that the seer's statement is invalid. That many of us cannot distinguish a diamond does not mean any reflection on the quality of the diamond: it reveals only our incapacity or our ignorance or both. And in this matter we put faith in the words of somebody, even the seller whom we probably meet for the first time. Indeed, inspite of our protestations to the contrary, a large part of our ideas of men and manners and things, which directs our purposive strivings in every phase of our life, we borrow from others on trust and faith without any verification whatsoever, even when they are verifiable. When this is the case even in matters of everyday life, we fail to see why we should not accept on trust the statement of the Acarya with regard to matters beyond our personal experience and beyond verification by ourselves for ourselves. Let us then be wise and listen to the words of the Acarya, for he is one who has visualised the Self that is the Overself.

Even granting for arguments' sake that the view of the Acarya is poetic, it deserves to be pointed out that here is a noble idea for all humanity to accept and adopt and practise, for it helps the realisation of the fundamental unity of all humanity— a realisation through which alone can be attained the peace and well-being of the world. When we realise that ourself is itself your self and their self, then alone can there be peace and amity and goodwill between man and man. And the earlier this realisation happens, the better for the world at large.

